1540

1540

மார்ச். 1935. மலர் 12—இதழ் 3.

வருஷ சந்தா
ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி
அம்மாள்.

பரிசுகளின் விவரம்.

---

## பொங்கிய காதல் : :

அல்லது **மங்களபாரதி**

துப்பறியும் நாவல்.

அதிகாரம்

8. யுவர்களின் கொண்டாட்டம்
   யுவதியின் திண்டாட்டம்
9. தூபரம் மிஞ்சினல் உயிரும் த்ருணமே.
10. நீதிக்கு முண்டோ ஆதரவின்மை !
11. முன்னர் இன்பம்—பின்னர் துன்பம்.

---

புதிய துப்பறியும் நாவல்

## பட்டமோ பட்டம் : :

...ல்லது . காலத்தின் கோலம்.

OFFICE OF THE REGISTRAR ...
7-MAR 1935
MADRAS

...மாகினி" ஆபீஸ்
...ரடித் தெரு,
...கேணி சென்னை

அ 2 அ

JL
M35-124
182974

# பரிசுகளின் விவரம்

1935ஆு பிப்ரவரிமீ 23வுக்குள் சேர்ந்த—புதிய சந்தாதாரரைச் சேர்த்துக் கொடுத்த—சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டதில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு ந. | ரூ. | சந்தா. ந. | | |
|---|---|---|---|---|
| 1 | 15 | P. 132, | Mr. | A. T. G. Paul, Vijapur. |
| 2 | 10 | M. 218. | ,, | C. Md. Sultan, Padang. |
| 3 | 10 | K. 358. | ,, | M. Kuppusamy, Ooty. |
| 4 | 5 | N. 25. | ,, | L. Nagappa, Ngaithaingyaung. |
| 5 | 5 | S. 462. | ,, | M. R. S. Saminathan, Colombo. |
| 6 | 5 | K. 177. | ,, | K. Krishna Mandur, Singapore. |

# முக்கிய அறிவிப்பு

இரண்டாவது இதழை வெளியிட்டவுடன் எனது பர்த்தா கடுமையான நோய்வாய்ப் பட்டுப் படுக்கையாகக் கிடந்ததால், அச்சிலிருந்த புதிய நாவலின்—பட்டமோ பட்டம்—வேலையைக் கொஞ்ச காலம் நிறுத்தி வைக்க வேண்டி நேர்ந்தது. கடவுளின் கருணையினால் அவரது தேக நிலை நிதானமாகக் குணமடைந்து வருவதால் இந்த 3-வது இதழை குறித்த காலத்தில் வெளியிட முடிந்தது. மேலும், புதிய நாவலின் வேலையும் தொடர்ந்து நடந்து வருகின்றது. இன்னும் இரண்டு வாரங்களில் புத்தகம் தயாராகி எல்லோருக்கும் அனுப்பப்படும். எதிர் பாராது ஏற்பட்ட இந்த தாமதத்திற்காக மன்னிக்கும்படி அன்பர்களை கேட்டுக் கொள்கிறேன்.

வை. மு. கோதை நாயகி.

# வேலையில்லாத் திண்டாட்டத்தின் அலங்கோலம்

படித்தும் வேலையகப்படாது திரிவதால் குடும்பங்களுக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களும், தர்ச்சகவாசஞ் செய்ய நேர்வதன் பயனாகக் கொலை, களவு, விபசாரம் முதலியனவும் செய்யத் துணிவதும் அவற்றால் அடையும் பலனும் நேரில் நடப்பது போன்று விஸ்தரிக்கப்பட்டுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் புது விதமாகச் சங்கம் ஸ்தாபித்து ஒழுங்காக நடைபெற்று, எல்லோரும் நல்ல வழியிலிருப்பதுடன், பல குடும்பங்களிலுள்ள ஊழல்களைக் களைந்து அவற்றைச் சீர்படுத்தும் விதத்தைப் படிக்க வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கும். எங்கும் நம் கண் முன்பு படும் இவ்விஷயத்தைப் பற்றிச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் எழுதியுள்ளது இதுவே முதல் நாவலாகும். இதில் பல திடுக்கிடும் சம்பவங்களும், துப்பறியும் சாமர்த்தியமும், ரஸமான சம்பாஷணைகளும், சிறந்த படிப்பினைகளும் நிறைந்திருக்கின்றன.

எட்டணா முன் பணமாக அனுப்புகிறவர்களுக்கு இந்த அருமையான நாவல்

## பட்டமோ பட்டம்

அல்லது

## காலத்தின் கோலம்

தபால் செலவின்றி அனுப்பப்படும்.

அவர்கள் தங்கி இருந்த கிராமமோ வெறும் பட்டிக்காடு. வண்டி அகப்படாது. ரயிலுக்குச் செல்வதென்றால் கட்டுச்சோத்து மூட்டையுடன் கால் நடையாகத்தான் செல்லவேண்டும். ஏதேனும் ஆபத்தான உடம்பு என்றால் நோயாளியை நெல்லடிக்கும் கட்டை வண்டியில் விட்டு தள்ளிக்கொண்டு மைல் கணக்கில் செல்லவேண்டும். பரம ஏழைகள் வாசம் செய்யும் இடமாதலால் அங்கு வண்டிக்கு என்ன செய்வது. ராஜனுக்கு உடனே செல்ல மனம் பதைக்கிறது. ஆதலால் இரவே நடந்து சென்று ரயிலை யடைய எண்ணிக் கிராமத்திலுள்ளவர்களில் இரு ஆட்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

அவனோடு வந்த இரு ஆட்களும் மிகவும் நல்லவர்களாகையினால் வழி நடை சிரமம் தெரியாது பேசிக்கொண்டே சென்றார்கள். இவ்வழிகளில் இதற்கு முன்பெல்லாம் கள்ளர்களின் பயமும், கட்குடியர்களின் உபத்திரவமும் இருந்ததாயும் இப்போது அவ்வளவு கிடையாதென்றும் பயப்படாமல் செல்லலாம் என்றும் கூறினார்கள். நமது ராஜன் இம்மாதிரி காட்டு வழிகளில் தனித்து வந்ததில்லையாகையால் அது ஒரு புறம் திக்கு திக்கு என்கிறது. தன் பாட்டனாரின் நினைவும், சாரதி, மாசிலாமணி இருவருடைய நினைவும் ஒரு புறம் வதைக்க மெல்ல அவர்களோடு வழி நடக்கிறான். மனத்திற்குள் பகவானை பிரார்த்தனை செய்தபடியே செல்கிறான்.

அச்சமயம் அந்த நள்ளிருளில் "ஐயா! வேண்டாம். வேண்டாம்; கொல்லவேண்டாம். கொலை செய்யவேண்டாம். நான் எந்த விதமான கஷ்டமேனும் பட்டு என் கனியை நான் காப்பாற்றுகிறேன். என்னுடைய புத்தி பிசகால், மடத்தனத்தினால் மனிதர்களின் யோக்யதையை அறியாது நம்பி மோசம் போய்விட்ட பாபத்திற்காக நான் இன்னும் கேவலமான கொலையைச் செய்யச் சகிக்க மாட்டேன். என் மடத்தனத்தினால் நான் இதுவரையில் பயந்துவிட்டேன். நான் என்னவோ குற்றவாளி குற்றவாளிதான். அதை மறைக்க இத்தகைய பெரும் பாவத்தைச் செய்வது சேற்றைப் பூசிக்கொண்டதோடு நில்லாது சாக்கடையில் புரண்டது போலாகு

மல்லவா? வேண்டாம். இப்படிக் கொடுங்கள்.'' என்று ஓர் தீனமான பெண் குரல் அலறுவது ராஜனின் காதில் பட்டது.

அவ்வாறு கேட்டதும் ராஜனின் இதயத்தில் ஈட்டி பாய்வது போன்று பெரும் வேதனை உண்டாகியது. திடுக்கிட்டான். ஏற்கெனவே இங்கு கள்ளர் பயம் உண்டு என்று அவ்வாட்கள் கூறியது அவன் மனத்தில் சற்று வேலை செய்துகொண்டே இருந்தது. அதோடு இக் குரலின் பரிதாபமான மொழியைக் கேட்டதும் "துஷ்டர்களிடம் யாரோ அகப்பட்டுக் கொண்டார்கள். அதனால் கத்துகிறார்கள்'' என்று எண்ணினான். தூரத்தில் மினுக்கு மினுக்கு என்ற ஓர் விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

ராஜன் தன்னுடன் வந்த ஆளை நோக்கி "ஐயா! நீங்களும் சகாயத்திற்கு வாருங்கள். அங்கு என்ன நடக்கிறது என்று பார்த்து நம்மால் ஏதேனும் உதவி செய்ய முடிந்தால் செய்யலாம். குரலைக் கேட்டால் பெண்ணின் குரல் போல விருக்கிறது. என்ன ஆபத்தோ பாவம். 'கொல்லவேண்டாம்.' என்று கத்துவது போல இல்லையா?'' என்றான். இதைக் கேட்ட அந்த ஆட்கள்,

"ஐயா! இவ்விடத்தில் இது ஓர் வியப்பல்ல. எத்தகைய கொலையும் வெகு சுலபமாக நடக்குமிடம் இது. இங்கோர் துஷ்டக் கூட்டம் இருக்கிறது. அக் கூட்டத்தின் தொழிலே இதுதான். இதை எப்படியேனும் காட்டிக்கொடுத்துவிட வேண்டுமென்று எத்தனையோ பெயர்கள் முன் வந்தார்கள். அவர்கள் மீதே குற்றங்களை ஜோடித்து தீராத வேதனையிலாழ்த்தி சிறைவாஸம் கிடைக்கும்படிக்குச் செய்துவிட்டார்கள். சில உத்யோகஸ்தர்களை தம் வசமாக்கிக் கொண்டு லஞ்சங் கொடுத்து லஞ்ச தேவதையின் உதவியால் தாம் தப்பித்துக்கொண்டு நிரபராதிகளைக் கதற வைத்து விட்டார்கள்.

இவர்களை எப்படியாவது கண்டு பிடித்துக் கையுங் களவுமாக காட்டிக் கொடுத்துவிடவேண்டும் என்று ஒருவர் வெகு தீவிரமாகவும் ரகஸியமாகவும் வேலை செய்தார். அவரையும் எப்படியோ கண்டு பிடித்து இரவோடிரவாகக் கொலை செய்து கண்ட துண்ட மாக்கி

மூலைக்கொரு பாகமாக எரிந்து கிடந்தது. அதற்குப் பிறகு இன்னொருவர் வந்தார். அவர் கதியும் இதேபோலாயிற்று. எல்லோரும் அதற்கப்புறம் பயந்து போய்விட்டார்கள். இப்போது அருகிலேயே வருவதில்லை. தாங்கள் ஏன் போகவேண்டும்? வேண்டாம். நாம் வழியோடு போய்விடுவோம். நீங்களோ மிகவும் அவசரமாக உங்கள் பாட்டனாரைப் பார்க்கச் செல்லவேண்டும். ஆகையால் பேசாது போய்விடுங்கள்'' என்றார்கள்.

இதைக் கேட்ட ராஜன் "அய்யா! நீங்கள் கூறுவதெல்லாம் வாஸ்தவந்தான்; இருப்பினும் ஒரு பெண்ணின் தீனமான குரலைக் கேட்டும், நாம் அதை கவனிக்காது சென்றால் மகா பாபமாகுமல்லவா? எது எப்படியாவது ஆகட்டும். பயப்படாதீர்கள். நீங்கள் இப்படி இந்த மரத்தின் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருங்கள். நான் உள்ளே செல்கிறேன்''. என்று கூறிக்கொண்டே நடக்கும் பாதையை விட்டு அந்த தொனி வந்த இடத்திற்குச் சென்றார்கள். அங்கு வரிசையாக மரங்கள் அடர்ந்திருந்தன.

ராஜன் தன் காலில் இருந்த செருப்பைக் கழட்டி கையில் வைத்துக்கொண்டு மெல்ல நடந்து அம்மரங்கள் அடர்ந்திருந்த பக்கம் சென்று பார்த்தான். அந்தோ! என்ன கொடுமை! என்ன கோர சம்பவம்! என்ன நெஞ்சு துணிபு. ஹா! கலியுகமே! உன் தலையில் இத்தகைய பாபங்களா வந்து தாங்கவேண்டும்? ஐயோ! சின்ன சிசு. தொப்புள் கொடியுடனிருக்கும் இச் சிசு இப்போதுதான் பிறந்ததென்று நன்றாகத் தெரிந்துகொண்டான். சற்றும் ஈவிரக்கம் பச்சாத்தாபம் அற்ற கொடிய அரக்கி போன்ற கன்னி கேவலம் பச்சை மண்ணாகிய அழகிய சிசுவின் மென்னியைப் பிடித்து இறுக்குவதையும், அவளுக்கெதிரில் மிகவும் பலஹீனமாயும், விசனமே வடிவமாயும், தலைவிரி கோலமாகப் புலம்பியபடியே குழந்தையைப் பிடித்துத் தன் பக்கம் இழுக்கும் கண்ராவியையும் பார்த்த ராஜனுக்கு அதற்குமேல் தாங்க முடியவில்லை. மனம் தத்தளிக்கிறது. தேகமே பட படத்து நடுங்குகிறது.

பொங்கிய ஆத்திரத்துடன் ராஜன் ஒரே பாய்ச்சலாக அவ்விட மிருந்து பாய்ந்தான். தன் கையிலிருந்த தடிக் கம்பினால் கன்னி

யின் தலை மீது ஓங்கி ஒரு அடி துணிந்து அடித்தான். மறு விநாடியே அக் குழந்தையை தபாரென்று போட்டுக்கொண்டு விழுந்தாள்.

உடனே ராஜன் அக் குழந்தையைத் தூக்கி வாரி எடுத்துக் கொண்டான். நல்லவேளையாக அங்கு தோண்டப்பட்டிருந்த குழியில் விழாமல் குழி பறித்துக் குவித்திருந்த மண்ணில் குழந்தை விழுந்ததால் அடி படவில்லை. எனினும் கேவலம் பச்சை மண்ணை மென்னியைப் பிடித்து அழுத்தியதால் அது மூர்ச்சித்துச் சவம் போலாகிவிட்டது. குழந்தை இறந்துவிட்டதென்றே கூறவேண்டும். ராஜசேகரன் வைத்திய சிகிச்சையில் முதல் புத்தகமும் (First Aid) இன்னும் சில புத்தகங்களும் படித்திருப்பதனால் சிறிது முறை தெரிந்து கொண்டிருந்தானாகையினால் அக் குழந்தைக்கு அம் முறைகள்படி கையைக் காலை இழுத்தும் நீட்டியும் மடக்கியும் தலை கீழாக ஆட்டியும் பலவிதமான சிகிச்சைகள் செய்தான்.

இதற்குள் ராஜனுடன் கூட வந்தவர்கள் வண்டிக்கார வரதனை மண்டையில் நன்றாக அடித்துக் கீழே தள்ளினார்கள். மீண்டும் அவனை எழுந்திருக்கவொட்டாமல் பிடித்து இழுத்துக்கொண்டுவந்து தங்கள் மேல் வேட்டியினால் அவனையோர் மரத்துடன் சேர்த்துப் பிணைத்து விட்டார்கள். கன்னியையும் தூக்கி இவ்வாறே மற்றொரு மரத்தில் பிணைத்துவிட்டுக் காமுவிடம் வந்து தங்கள் வழிப் பிரயாணத்திற்காகக் கையில் வைத்திருந்த தண்ணீரை முகத்தில் தெளித்து எழுப்பினார்கள்.

காமு மிகவும் பலஹீனப்பட்டுப் போய்விட்டதால் அவளுக்கு சீக்கிரத்தில் ப்ரக்ஞையே உண்டாகவில்லை. குழந்தைக்கு வெகு நேரங் கழித்து மூச்சு வருவது தெரிந்தது. ராஜனுக்கு எந்த விஷயமும் தெரியவில்லை எனினும் இச் சிசுவை அநியாயமாகக் கொலை செய்ய எத்தனித்ததும், அம்மாது இக் குழந்தையின் தாயார் என்றும் தெரிந்துகொண்டான். இவ்விருவருடைய உயிரையும் தற்போது காக்க வேண்டுவது தன் கடமை. பிறகு மற்ற விஷயங்களை விசாரித்துக் கொள்வது என்று முடிவு செய்துகொண்டாள்.

அங்கு ஒரு வண்டி நிற்பதைப் பார்த்தான். இவனுடைய சந்தேகம் இன்னும் அதிகரித்தது. இப் பெண்ணை பலாத்காரமாகக் கொண்டுவந்து இங்கு குழந்தையுடன் கொலை செய்ய எத்தனித்திருப்பதாக யூகித்தறிந்து கொண்டான். உடனே இவனுக்கோர் துணிபான யோசனை தோன்றியது. தன்னுடைய படுக்கையை அவ் வண்டியில் விரித்தான். அவ் வாட்களில் ஒருவனுக்கு வண்டியோட்டத் தெரியுமாதலால் அவனை வண்டியை கட்டச் செய்து பின்னர் காமுவை இருவராகத் தூக்கி வண்டியில் கிடத்தினார்கள். குழந்தையை ராஜனே மடியில் வைத்துக்கொண்டான். அந்த குடிசைக்குள் யாரேனுமிருந்தால் இதுகாறும் வராதிருப்பார்களா! ஆகையினால் யாருமிருக்கமாட்டார்கள். அப்படி யாரேனும் இருந்தாலும் அதற்குள் இப்பேதையை அப்புறப்படுத்திக் காப்பாற்றி விடவேண்டுமென்று ராஜன் எண்ணியதால் உடனே வண்டியை மெல்ல விடச் செய்தான். வண்டியும் நகர்ந்துவிட்டது. ராஜன் தன் கையிலுள்ள பாக்கெட்டு விளக்கை அடிக்கடி ஏற்றி குழந்தையையும் காமுவையும் கவனித்துக்கொண்டே வந்தான்.

குழந்தைக்குக் கொடுக்கும்படியான ஆகாரம் என்ன இருக்கிறது. இடமோ நடுக் காடு. காலமோ கொடியவர்களின் இதயத்தைப் போன்று பசையற்று, ப்ரகாசமற்று கரும் இருளுடன் கூடிய இரவு. 'ஈச்வரோ ரக்ஷது' என்று எண்ணி தன் வழிப்பிரயாணத்திற்காகக் கையில் வைத்திருந்த வென்னீரை சொட்டு சொட்டாகக் குழந்தையின் வாயில் வார்த்தான். மென்னியை அழுத்திய கொடுஞ் செயலால் குழந்தையின் தொண்டை ரணமாகிவிட்டது. ஏதோ ஒரு சரடு உயிர் இருப்பதாக மூச்சு வருகிற கூறைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

182974

இவர்களை ஆஸ்பத்திரியில் விடலாமென்றால் இவர்களின் உண்மை வரலாறு தனக்கே தெரியாது. இது ஏதேனும் குற்ற வழி என்று தெரிந்தால் சேர்க்கவே மாட்டார்கள். அதோடு வழக்கும் தொடர்ந்து விடுவார்கள். ஆகையினால் தனிமையில் தான் வைத்துக் காப்பாற்றவேண்டுமென்று ராஜன் தீர்மானித்தான். ஆதலால் விடியற்

காலையில் ரயில்வே ஸ்டேஷனை யடைந்ததும் ஒரு தனி மோட்டார் பேசிக்கொண்டு நேரில் தன் ஊருக்கே போய்விடுவதென்று துணிந்து அப்படியே ஓர் வாடகைச் காரில் குழந்தையையும் தாயையும் ஏற்றிக் கொண்டு அவ் வண்டியை அங்கேயே ஒரு புறம் போட்டுவிட்டு இவ் விருவரையும் உடனழைத்துகொண்டு ப்ரயாணமாகி விட்டான்.

முன்பின்னறியாதவர்களை திடீரென்று இன்னிலைமையில் அழைத்துச் சென்றால் யார் என்ன சொல்வார்களோ, என்னவோ! என்கிற யோசனையும், பயமும் ஒரு புறம் பாதிக்கின்றது. "நாம் நல்லதை எண்ணி நல்ல காரியத்தைச் செய்தால் ஈசன் விட்ட வழி யாகட்டும்'' என்று தீர்மானித்துத் துணிந்துவிட்டான். வழி நெடுக வும் காமுவைப் பார்க்கிறான்; குழந்தையைப் பார்க்கிறான். இரு உயிர் களும் ஆபத்தான நிலைமையிலிருப்பதால் கவலையே அதிகமாகி விட்டது.

காலை சுமார் 10 மணிக்குத் தன் ஊரை யடைந்தான். மோட்டா ரோடு அவ்வூரில் யாரும் வருவது அதிகம் கிடையாது. யாரேனும் அபூர்வமாக வந்தாலும் அந்த ஊர் ஜனங்கள் முற்றும் ஈசல்போல வந்து சுற்றிக்கொள்வது வழக்கம். அதுபோல ராஜசேகரன் மோட் டாரில் வந்ததும் அத் தெரு ஜனங்கள் வந்து சுற்றிக்கொண்டார்கள். ஜனங்களை எவ்வாறு இவன் தடுக்கமுடியும்? ஒவ்வொருவரும் வியப்புக் குறிப்புடன் கன்னத்தில் கையை வைத்தவர்களும், வாயில் கையை வைத்தவர்களுமாக. "இவள் யார்? இதென்ன பிணம்போல இருக்கிறாளே! ஐயோ! குழந்தைகூட ஒன்று இருக்கிறதே! இவர்க ளெல்லாம் யாரோ?'' என்று அப்போதே பேசிக்கொள்ள வாரம்பித் தார்கள். ராஜசேகரனின் மனம் இதை யறிந்து தவித்தது. என்ன செய்வான் பாவம்!

---

## 9-வது அதிகாரம்.

### துயரம் மிஞ்சினால் உயிரும் த்ருணமே!

உலகத்திலுள்ள சகல மாந்தரும் அறிவு மயமாகி, கல்விக்களஞ்சியமாகி இருந்தால் கலகமேது? அமளி எது? வம்பு எது? வீண் வழக்கேது? எல்லாம் சம தர்மமாக இருக்குமன்றோ! அதில்லாமையினால் மேற்குறித்த யாவும் பல இடங்களில் தாண்டவமாடி, அட்டகாசம் செய்து எத்தனையோ குடும்பங்களை யழித்தும், கலைத்தும், தனிப்பட்ட நபர்களைப் பாழ்ப்படுத்தியும், கலகங்களை விளைவித்தும் அனர்த்தம் செய்து ஆட்சி புரிந்து வருகின்றன வென்பது யாவரும் அறிந்த விஷயமே: அதே நிலைமையிலுள்ள வள்ளியம்மாளின் விபரீதப் போக்கின் விசேஷத்தைக் கூற வேண்டுமா?

பாரதி தனக்கு வந்த கடிதத்தை அந்த அம்மாள் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டவுடன் அப் பெண்மணியின் துடிப்பை என்னென்று விவரிப்பது? அந்த அம்மாளின் தடபுடலும் அட்டகாஸமும் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருந்த பாரதிக்கு இது ஏதோ அனர்த்தத்திற்குத் தான் இம்மாதிரி நடந்திருக்கிறது என்று சுருக்கென மனத்தில் தைத்தது.

வள்ளியம்மாள் அக் கடிதத்தை வெகு ஊக்கத்துடன், கண்கள் சிவக்கப் படித்துக் கொண்டிருக்கிறாள். முகமும் வாயும் அடிக்கடி நெறிவதும், கோணுவதுமாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டே நிற்கும் பாரதிக்கு இடி இடித்து விட்டது. தைரியத்துடன் எதிரில் வந்து "பாட்டி! இக் கடிதம் எப்போது வந்தது?" என்று மெல்ல கேட்டாள்,

அது வரையில் வெகு ஸ்வாரஸ்யமாகக் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த வள்ளியம்மாள் கொள்ளியம்மாளாக மாறித் துள்ளி எழுந்து, கோபமும் ஆத்திரமும் அள்ளி வீச, கள்ளமற்ற காரிகையை உள்ளக் கொதிப்புடன் நோக்கி, அவளைக் கிள்ளுக் கீரையைப் போல மதித்து "ஏண்டீ கள்ளீ! ஒன்று மறியாதவள் போல என்னை மழுப்ப வந்து விட்டாயே! உன் செய்தி எனக்குத் தெரியா தென்று நினைத்தாயா! பேஷ்! வெகு அழகு! உன் லீலைகளெல்லாம் நிரம்பவும் ஒழுங்காக இருக்கின்றன. யாரடீ, இந்த கட்டைத் தடியன்? இவனை எத்தனை நாளாகடீ கள்ளத்தனமாக நேசித்திருக்கிறாய்! உன் ஆத்தாள் இருக்கையிலேயே இந்த வியாபாரம் உண்டா? பிறகு ஏற்பட்டதா! போட்டோ படத்தைப் பார்த்தாயா! ஆஹ்ஹா! இம்மாதிரியான பிழைப்பு பிழைச்கும் நீயாடீ நடிப்பு சுந்தர நாகரிக ஆட்டம் ஆடுகிறாய். உம். உன் குட்டு வெட்ட வெளிச்சமாகியதை மறைக்க முப்பாட்டான் வந்தாலும் முடியாது.

எங்கள் குலத்துப் பெருமை என்ன! உன் தகப்பனும் பாட்டனும் வாழ்ந்த வாழ் வென்ன? இப்போது நீ இம்மாதிரி ஆட்டமாடுகிறாயே! வெட்கக்கேடே! வயிற்றெரிச்சலே!" என்று தாறுமாறுகத் திட்டி, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தாள்.

இடியோசை கேட்ட நாகம் போலும், காற்றிலசையும் மரக்கலம் போலும் திடுக்கிட்டு அப்படியே ப்ரமை கொண்டு தத்தளிக்கின்ற பாரதி "பாட்டீ! இதென்ன அனியாயம்! இப்படியும் உங்கள் வாயில் சொற்கள் வருகின்றனவே! இந்த மனிதன் என் தாயாருக்கே தெரிந்தவர். அவள் இருக்கையிலேயே இங்கு வந்தவர். மாசிலாமணிக்கு மிக மிக சிநேகிதர். அவன் படுத்து விட்ட காலத்தில் சரீரத்தினுலும், பணத்தினுலும் தானே அருகிலிருந்து உதவி செய்த பெருமான் இவர். இத்தகையவருடைய படம் வீட்டிலிருக்க வேண்டு மென்று அண்ணனுக்கு புத்தி கலங்குவதற்கு முன்பே பல படங்கள் மாட்டி இருக்கிறான்.

இதோ! இந்தப் படங்களை எல்லாம் பாருங்கள். அண்ணனும்

இவரும் ஆட்டம் ஆடுவதும், இன்னும் பலவிதமாக இருக்கிறதைப் பாருங்கள். இது என்ன புதிதானதல்லவே! படத்தைக் கண்டு பெரிய புராணங் கட்டி விடுவதுதானு அழகு!'' என்று கூறியபடியே மெல்ல பலாக்காக சடக்கென்று கிழவியின் கையிலிருந்த படத்தையும், கடிதத்தையும் பிடுங்கிக் கொண்டாள்.

இச் செய்கையைக் கண்டு இன்னும் ஆத்திரம் பொங்கிய வள்ளியம்மாள் தன் விச்வரூபத்தை முற்றிலும் காட்டி கோபாக்கினியால் தலை கால் தெரியாது குதிக்கின்ருள். "ஏண்டீ சிறுக்கி! உன் ஆத்தாள் இருக்கையிலேயே உனக்கு இப் பழக்கம் என்பது வெகு பெருமையாக சொல்லிக்கொள்கிருயோ! சீச்சீ! நாணங் கெட்டவளே! இத்தகைய லீலைகளுக்குத் துணை இருக்கவா நான் இங்கு வந்தேன். இனி அரை நிமிஷமும் இங்கு இருக்கவும் முடியாது; உன்னைத் தனியே விடவும் முடியாது. உம். ஒரு பெட்டைச்சிக்காக இந்த பட்டினவாஸம் செய்தது போதும். உடனே கிளம்பு. உம்; உடனே மூட்டையைக் கட்டு.'' என்று கூறியபடியே சாமான்களை எல்லாம் தடார் புடார் என்று ஒழிக்கவும், கட்டவும் ஆரம்பித்து விட்டாள்.

பேதைப் பெண் என்ன செய்வாள் பாவம்! திடீரென்று தான் பரதேசியானதும், அச்சமயம் தனக்குப் பெரிய துணையாக உதவிக்கு வந்ததும் தற்போது அவளே பெரிய சனியாக எமனுப் மாறியதையும் எண்ணி இவளால் சகிக்க முடியவில்லை. தான் எவ்விதம் இவ் வூரை விட்டு வேறு இடத்திற்குச் செல்வது? இதென்ன எதிர் பாராத அனியாயம்! அங்கு சென்றுதான் அண்ணனைப் பார்க்க முடியாது தவித்துக்கொண்டு வருகையில் இங்கு இம்மாதிரியாகவா ஈசன் சோதனை செய்யவேண்டும்? அடாடா! என் விதி யமைந்த வகை தான் என்னே!'' என்று தனக்குள் அளவிலாத விசனமடைந்தாள்.

"பாட்டீ! இதென்ன இவ்விதம் வீணுகக் கோபித்துக்கொண்டு நீங்கள் புறப்படுவது சற்றும் சரி இல்லை. நீங்கள்......என்று முடிப்பதற்குள் "போதுமடீ! உன் ப்ரஸங்கம்!. உனக்கு இத்தனை பெரிய கிழட்டுப் பிணத்தை எதிர்த்துப் பேசுவது ஒரு லக்ஷியமா! எத்தனை

தைரியமிருந்தால் முன் பின்னறியாத தடியன்களுடனும் தடிச்சிகளுடனும் நீ இந்நேரம் ஊர் சுற்றிவிட்டு வருவாய்! இதொன்று போதாதா உன்னுடைய நெஞ்சழுத்தத்திற்கு?'' என்று விடுவித்துக் கூறினள். வீட்டிலிருக்கும் சகல சாமான்களேயும் எடுத்து தடார் புடார் என்று போட்டுக் கட்ட வாரம்பித்தாள்.

பாரதிக்கோ, கையிலுள்ள இக்கடிதத்தைப் படிக்க ஆவல் தூண்டுகிறது. படிக்கவும் பயம் பாதிக்கிறது. என்ன செய்வாள் பாவம்! கடிதத்தையும், படத்தையும் மடியில் வைத்துக்கொண்டாள். வள்ளியம்மாள் வசை புராணங்களே அத்யாயம் அத்யாயமாகப் படித்துக்கொண்டே, சாமான்களே ஒழித்து மூட்டை கட்டுகிருள். பாரதி எத்தனேயோ வணக்கமாகப் புலம்பி தடுத்துக் கூறியதெல்லாம் வீணுகிவிட்டது.

"இந்த ஆட்டங்களே இந்த மட்டோடு கட்டிவையடீ! உன் ஆடம்பரம் போதும். ஒரு தாயார் இருந்தாள் அவள் செத்தாள். ஒரு அண்ணன் பைத்தியமாகி ஆஸ்பத்திரியில் கிடக்கிருன். இனி நீ யாருக்காகடீ இங்கு இருக்கவேண்டும். இக் காலி பையனுக்குத் தானே! தெரியும்டீ எனக்கு. உம். புறப்படு. நானும் வந்த நாள் முதற் கொண்டு இந்த ஆட்டங்களே எல்லாம் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். வயசு பெண்ணுக்கு அடக்க ஒடுக்கமின்றி—நாணமின்றி —இத்தனே தைரியத்துடன் வாழத் துணிச்சல் உண்டாகியது உன் தாயார் அடக்கி யாளாததும், பட்டினவாஸத்தின் கொடுமையுந் தான் காரணம்.

'என்று மூட்டை கட்டலாம்?' என்று நான் தினத்தை எதிர் பார்த்துக்கொண்டே இருந்தேன். இன்றுதான் சரியாயிற்று. உம். இம்மட்டும் போதும். இக்கடிதத்தை நான் மட்டும் பார்த்ததாக நினேக்காதே. குடித்தனக்காரி பார்த்துக் காரியுமிழ்ந்தாள். எத்தனேயோ நாளாக இவள் இப்படித்தானிருக்கிருள் என்றும் கைகொட்டிச் சிரித்தாள். அது போதாதா! உம். இந்த பழயதைச் சாப்பிடு. இரவு இரண்டு மணிக்கு வண்டியாம். இப்போதே ரயிலடிக்குப் போய்விட

லாம். இனி வரயைத் திறக்காதே!'' என்று கண்டிப்பான உத்திரவு போட்டுவிட்டாள்.

உடனே ஒரு வண்டியை யமர்த்திச் சாமான்களை எல்லாம் ஏற்றியும் விட்டாள். இந்த சங்கடமான நிலைமையில் பாரதிக்கு சாப்பாடு வேறு வேண்டுமா! அவள் மனமும் இதயமும் துடித்து உருகுகின்றன. கொடிய அரக்கியின் கையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் இன் னிலைமையில் இனி என்ன சொல்லித்தான் என்ன பயன்? "எனக்கு நல்ல காலம் உண்டாயின் என் பிதா ஏன் இறக்கவேண்டும்? மற்றவர்களின் கதி ஏன் இம்மாதிரி முடியவேண்டும்? என் போதாக் காலத்திற்குத்தான் இவ்வாறெல்லாம் நேர்ந்தன. இன்னும் என்னென்ன அனுபவிக்கவேண்டுமோ, பழிகள் கேட்கவேண்டுமோ தெரியவில்லையே! இவ்வித மாறுதலும் விபரீதமும் காத்துக்கொண்டிருக்கிறதென்று சற்று முன்பு வரையில் யாராவது நினைத்தார்களா! உம். நான் மகா பாவி. அதனுல்தான் இத்தகைய பிறவி பிறந்தேன்''. என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள்.

கண்ணீரோ ஆற்று வெள்ளம் போல ஓடுகின்றது. "இத் தகவலை நாம் அவருக்கு எவ்விதம் தெரிவிப்பது? இன்னும் சில தினங்களில் வருவதாக முன்பு வந்த கடிதத்தில் தெரிவித்திருந்தாரே! இக் கடிதத்தில் என்ன இருக்கிறதோ தெரியவில்லையே! அவர் வந்தால் இங்கு நாங்களில்லாத விஷயத்தை எங்ஙனம் அறிவார்? ஐயோ! ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்ருயிற்றே! என்ன செய்வேன்?'' என்று தவிக்கின்ருள். நேரமோ சக்கரம் போலச் சுழன்று கொண்டே சென்ற, இரவு வந்துவிட்டது. மணி எட்டிருக்கும்.

இந்த துக்க நிலைமையில் சாப்பாடுதானு பாரதிக்கு வேண்டியிருக்கிறது! 'இக் கடிதத்தை வ்யாஜமாக வைத்துக்கொண்டு வள்ளியம்மாள் புறப்பட்டிருக்கிருளே யன்றி, இம்மாதிரி செய்யவேண்டுமென்று வெகு நாட்களாக யோசித்து முடிவு செய்திருந்தாலொழிய இத்தனை வேகமாக இக் காரியத்தைச் செய்ய முடியாது!' என்றதை பாரதி ஒரு நொடியில் தெரிந்துகொண்டாள். எதைத் தெரிந்து கொண்டுதான் பெண் பேதை என்ன செய்யக்கூடும்?

"எனக்குப் பசி இல்லை; சாப்பாடு வேண்டாம்." என்று கூறிவிட்டாள். உடனே ரயிலடிக்குப் புறப்பட்டுவிட்டாள். வாணீ புரத்து ரயிலடிக்கு இரவு 10 மணிக்கே வந்து மூட்டைகளுடன் உட்கார்ந்துவிட்டாள். இராக் காலம் நிலவு பட்டை வெடிக்கக் காய்கிறது. அந்த ரயில் ஸ்டேஷன் சிறியது. அதைச் சுற்றிலும் தோப்பும் துறவும் அடர்ந்திருக்கின்றன. சிலுசிலுப்பான காற்று குளிர் உண்டாகும்படி வீசுகிறது. ரயிலுக்கு வந்துள்ள மற்ற பிரயாணிகள் தம் தம் குடும்ப விஷயங்களைப்பற்றி சள சளவென்று பேசுவோரும் சிலர் குறட்டை விட்டுக்கொண்டு தூங்குவோரும், சில ஆண்கள் அங்குள்ள வெய்டிங் ரூமில் படுத்துக்கொண்டிருப்போருமாகப் பல மாதிரியாக இருக்கிறார்கள்.

காளிகாதேவியே நேரில் பிரஸன்னமாகியது போன்ற நமது வள்ளியம்மாள் மூட்டைகளை நிறுத்து, லக்கேஜில் போட்டுவிட்டுக் கையில் கையில் கொண்டுபோவதைத் தன் பக்கலில் வைத்துக் கொண்டு நன்றாகத் தூங்க வாரம்பித்துவிட்டாள். தனிமையில் ஒரு புறமாக உட்கார்ந்திருக்கும் பாரதியின் நெஞ்சம் கொதிக்கின்றது. கண்ணீருக்கோ இணை கட்டவே சாத்தியமில்லை. மாசு மருவற்ற சந்திரிகையின் பிரகாசமும்,நிச்சப்தமான வேளையின் அமைப்பும் பாரதியின் விசனத்திற்கு ஆறுதலைக் கொடாது பகீர் பகீர் என்கிற திகிலையும் அடங்காத விசனத்தையுமே அளித்து வாட்டுகின்றன.

தன் விசனத்தை யாருடன் தெரிவிப்பாள்? எவ்விதம் அதற்கு சாந்தியுண்டாகும்? "நிஷ்களங்கமான நீல பரப்பு ஆகாயத்தில் துல்லியமாகவும் ஏக சக்ராதிபதியாகவும் செங்கோல் செலுத்தும் மதி மன்னனும், அவனது ப்ரஜைகளோவென்று கூறத்தக்க நக்ஷத்திரக் கூட்டங்களும் வெகு சிறப்புடன் பிரகாசிக்கையில் உங்கள் ஒளியில் வீற்றிருக்கும் இப்பாவிக்கு ஓர் ஆறுதல் கூறவும் கஷ்ட நிவர்த்தி செய்யவும் உங்களுடைய சக்தி குன்றிவிட்டதா! சக்தி யற்றுவிட்டதா! ஐயோ இம்மாதிரியாக நான் பலரையும் பலமுகமாகப் பிரிந்து ஒண்டிக்கட்டையாக, அரக்கிக்கு ஒத்த இக் கிழட்டுப் பிணத்துடன் செல்லவா விதி யமைந்தது. என்ன செய்வேன்?

அண்ணா! மாசிலாத மணி என்றால் உனக்கே செல்லுமல்லவா! அத்தகைய உன் கதி இப்படி யாகியதாலன்றோ நாம் பக்ஷிகளைப் போல ஒவ்வோரிடத்திற்குப் பறந்துவிட்டோம். ஹா! இதை நீ யறிந்தால்—அறிய சக்தி பெற்றால்—பிறகு விமோசனம் உண்டாகாதா! ......ராஜசேகரா!... என்ன அழகிய நாமம். ராஜசேகரா! இந்த விபரீதப் பிரிவை உங்களுக்கு நான் எவ்விதம் அறிவிப்பேன்? பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டுள்ள நான் எவ்விதம் கடிதம் எழுதுவேன், எவ்விதம் அனுப்புவேன்? தபால் தலையும், கார்டும் கைவசமில்லையே! ஐயோ! என்ன ஆபத்து மலைபோல வந்துவிட்டதே!'' என்று கண்ணீர் பெருக உட்கார்ந்திருந்தாள்.

நிலவு காலமாகையினல் சில பக்ஷிகள் சப்தித்துக் கொண்டே அங்கு மிங்கும் பறக்கின்ற சத்தத்தைத் தவிர வேறு கிடையாது; நிச்சப்தமாகிவிட்டது. எல்லோரும் அந்த சிறிய ஸ்டேஷனில் அப்படியப்படியே படுத்து விட்டார்கள். பாரதி தனிமையில் விக்கி விக்கி யழுதவாறு பல யோசனைகளால் உந்தப் பட்டுத் தவிக்கின்றாள். தான் எங்கேனும் சென்று ப்ராணனை விட்டு விடவும் எண்ணுகிறாள். ஆனல் அந்த தற்கொலை பாதகத்தை எண்ணித் தேறுகிறாள்.

சரியாக இரவு இரண்டு மணிக்கு வண்டி இரைச்சலிட்டுக் கொண்டு வந்தது. எல்லா ஜனங்களும் எழுந்து மேல் விழுந்தடித்துக் கொண்டு ஏறுகிறார்கள். வள்ளியம்மாள் பெண்கள் வண்டியில் பாரதியையும் ஏற்றித் தானும் ஏறிக் கொண்டாள். அந்த வண்டியிலோ பெண்கள் ஆடு மாடு போல அடைபட்டுக் கிடக்கின்றார்கள். கீழேயுள்ள ஆபாசமோ கூறத்திறமில்லை. எச்சிலும், புகையிலையின் துப்பலும், குழந்தைகளின் மூத்திரமும் அசங்கியமும் சோற்றுப் பருக்கைகள், தின்பண்டத் துண்டுகள், இலைகள், வாழைப் பழத் தோல்கள் இவை போன்ற பல அசங்கியமும் காலைக் கீழே வைக்கவும் முடியாது வாந்தி வரும்போல விருக்கிறது.

நாற்றமோ கூறத்திறமில்லை. இந்த ரோந்தையுடன் ஜனங்களின் அட்டகாஸமோ, வாய்ப் பதட்டமோ சொல்ல முடியாது. இடம் கிடையா தென்று ஏறுபவர்களிடம் சண்டையிட்டுப் புரட்டித்

தள்ளுவதும், குஸ்தி செய்து ஏறுவதும் பெரிய வேடிக்கை. யுத்தத்தில் வசை பாணப் பிரயோகங்கள் பலமாக வருஷிக்கின்றன. வள்ளியம்மாளுக்கு ஏற்ற ஒரு சுள்ளியம்மாள் பெரிய சண்டைக்கு இழுத்து லடாபுடா ஏற்பட்டு விட்டது.

இதையே யோர் தருணமாக எண்ணி பாரதி கக்கூஸுக்குள் போய் கதவைத் தாளிட்டுக் கொண்டு மடியிலிருந்த கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள். அது பின் வருமாறு.

"என் அன்பைக் கவர்ந்த ஆரணங்கே!

என்னை மன்னிக்கவும். என்னால் தடுக்க வியலாது பொங்கி எழும் அன்பு வெள்ளத்தினால் வரும் பதத்தை வரைந்து விட்டேன். எத்தனை காலத்திற்கும் பூடகமாக வைத்திருக்கும் சக்தி, சக்தியே உருக் கொண்ட பெண் தெய்வங்களுக்கே உரித்தாயது என்பது உலக அனுபவம். அத்தகைய வகையைச் சேராத நான் வெளிப் படையாகக் கூறி விட்டேன்.

அருமை பாரதீ! அன்பு வடிவே! நான் நினைத்த தெல்லாம் ஒன்றாயும், நடப்பது வேறாயும் ஆய் விட்டன. எனது உபாத்தியாயர்களும் என் சனேகிதர்களும் ஒன்று கூடி பம்பாயிக்குப் போவதாகத் தீர்மானமாகி விட்டது. அங்கு நான் வருவதாக எழுதி உன் ஆவலை அதிகரிக்கச் செய்து ஏமாற்ற மடைய வைத்து விட்டேன். என்ன செய்வேன்?

இரவு பகலாக என் இதயத்தில் குடி கொண்டுள்ள உருவங்களை நான் எங்ஙனம் மறந்திருத்தல் கூடும்? இப்போது சமீபத்தில் ஒரு ஆட்டத்தில் ஜெயித்த போது எடுத்த இப் படத்தை இதோடு அனுப்பி இருக்கிறேன். இது உனக்குத் திருப்தியாக விருக்கு மென்று நம்புகிறேன். மாசிலாமணி எவ்வாறிருக்கிறான்? நீ சென்று பார்த்தாயா! நான் பம்பாய் சென்று வந்த உடனே கட்டாயம் வருகிறேன். எனக்கு இக்

கடிதமாவது எழுதாமலிருக்க மனந்தாங்க வில்லை யாதலால் இதை எழுதுகிறேன். மன்னித்து விடு.

இங்ஙனம் இரவு பகல் உன்னையே நினைத்திருக்கும்

ராஜசேகரன்.''

அதைப் படித்து முடித்தாள். பாரதியின் தேகமே மயிர் சிலிர்த்து ஆட்டியது. அவளையறியாத ஆநந்தம் புளகிதமாயிற்று. ஒரு நிமிட நேரம் அப்படியே அசைவற்று அந்த புகைப் படத்தைப் பார்த்தபடியே நின்றுவிட்டாள். "ஆகா! அம் மகானுபாவனுடைய அன்பிற்கு நான் பாத்திரமாகும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா! இல்லை; இல்லை. நான் மகா பாபிஷ்டி. எனக்கு ஒருபோதும் கிடைக்காது. என்ன ஆசை! முடவன் கோம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போலத்தானிருக்கிறது.'' என்று தனக்குள் பெருமூச்செறிந்தாள்.

இதற்குள் இன்னும் யாரோ வெளியில் கதவை ஆட்டுவது கேட்டு திடுக்கிட்டு விரைவாகக் கடிதத்தை மீண்டும் சுருட்டி மடியில் வைத்து வீட்டு கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தாள். கூட்டம் அடைபட்டுக் கிடப்பதால் அவளால் நிற்கமுடியவில்லை. கால் பட்டது, கை பட்டது என்று சண்டைக்கு வருகிறுர்கள். தலை விதியே என்று ஒரு புறம் ஒட்டிக்கொண்டு நின்றிருந்தாள். நாற்றத்தின் குமட்டலும், நிற்பதின் சிரமமும், மனக் கவலையும் ஒன்று கூடி நமது பெண்மணியை வாட்டுகின்றன. விதியே என்று நின்றும், ஒட்டிக்கொண்டு உட்கார்ந்தும் பொழுதைக் கடத்தினுள்.

விடியற்காலை மலைநகர் என்கிற இடத்தில் வண்டி வந்து நின்றதும், வள்ளியம்மாள் இறங்கினுள். பாரதியும் கூட இறங்கினுள். "இதோ பக்கத்தில் இரண்டு மைலில் இருக்கும் கிராமத்திற்கு வண்டி எதற்கு? உம். மூட்டையை தூக்கிக்கொள்ளு'' என்ருள். விதி எவ்விதமெல்லாம் ஆட்டுகிறதோ அவ்விதம் ஆடித் தீரவேண்டுமல்லவா! மூட்டையை தூக்கிக்கொண்டு புறப்பட்டாள். வயிற்றுப் புரட்டலும் வாந்தியும் பாரதியை பாதிக்கின்றன. நடக்கமாட்டாது அடிமேலடியாக நடந்து கிராமத்தை யடைந்தாள்,

அங்கு பெரிய அக்ரகாரம் ஒன்று காணப்பட்டது. அதன் நடுவில் சாதாரணமான தட்டோடு வீடுதான் நமது வள்ளியம்மாளுடையது. அவ்வீடு பூட்டப்பட்டிருந்ததால் குப்பையும், செத்தையும் சரம் சரமாக ஒட்டடையும் திரிஞ்சல் சஞ்சாரமும் வௌவாலின் வாஸமும் வெகு மும்முரமாக விருந்தன. மக்க நாத்தம் ஒவ்வொரு உள்ளிலிருந்தும் குபீர் குபீர் என்று கிளம்புகின்றது. இவைகளைப் பார்த்த உடனே பாரதிக்கு ஏதோ செய்கிறது. இதற்குள் வள்ளியம்மாள் அதிகார தோரணையில் "அடீ பாரதி! தளுக்கு சுந்தரீ! இனி உன் பட்டின வாஸத்து நாகரிகம் இங்கு கிடையாது. உம். இந்தா குடம்; இந்தா தாம்பக்கயிறு; அதோ புறக்கடைத் தோட்டத்தில் கிணறு இருக்கிறது. ஜலம் கொண்டுவந்து இவ் வீடு முற்றிலும் பெருக்கி மெழுகிச் சுத்தம் செய்து கோலம் போடு" என்று ஆக்ஞாபித்தாள்.

என்ன செய்வாள் பாவம்! இள நங்கை குடத்தை எடுத்துக் கொண்டு தோட்டத்தை நோக்கிச் சென்றாள். இதற்குள் வள்ளியம்மாளை விசாரிக்க எல்லோரும் கூடிவிட்டார்கள். அந்த அம்மாளின் சகபாடிகள் எல்லோரும் யோக க்ஷேமம் விசாரித்து, பாரதியைப்பற்றி "இவளா உன் பேத்தி? என்ன வாட்ட சாட்டமா இருக்கிறாடீ! கல்யாணம் இன்னுமா ஆகவில்லை?" என்றார்கள்.

பாரதிக்குள்ள களைப்பும், மனச் சோர்வும் ஒன்றுகூடி வருத்துவதால் நடக்கவும் முடியாமல் தள்ளுகின்றது. ஆதிசேஷன் தலையிலுள்ள மாணிக்கமும் பளபளப்பாகத் தெரியும்படியாக அத்தனை சமீபத்தில் ஜலம் இருக்கும் கிணற்றில் ஒரு குடம் தண்ணீர் மொள்ள சுமார் 5 நிமிஷத்திற்குக் குறையாது ஆகிறது. இந்த நிலைமையில் எத்தனை குடம் தண்ணீர்தான் தூக்குவது. கைகளிரண்டும் விழுந்து போகின்றன. பெருமூச்சு வாங்குகிறது. வெயர்வை வெள்ளம் பொங்குகிறது. வீட்டிலிருக்கும் அழுக்கோ சொல்ல முடியவில்லை. எத்தனை குடம் தண்ணீர் கொட்டினாலும் போதவில்லை. என்னதான் செய்வாள் பாவம்!

கஷ்டம் ஒரு புறம், தன் விதியும் காலகதியும் மாறிய கொடு

மையை எண்ணி விசனம் ஒரு புறம் தாங்காமல் தவிக்கின் ருள். விதியே என்று வீட்டை முற்றும் சுத்தம் செய்தாள். இரும்புக் கூடு போல விருந்த பாத்திரங்களை எல்லாம் வெளுக்கத் தேய்க்க வேண்டு மென்ற உத்திரவாயிற்று. அத்தனை பாத்திரங் களையும் கிணற்றடியில் போட்டுக் கொண்டு தேய்த்தாள். எல்லா வேலைகளும் முடிந்து சமயலாகி விட்டது. அதற்கு மேல் பாரதி யால் தாங்க முடியவில்லை. களைப்பு மேலீட்டால் அடுப்பங்கரையி லேயே படுத்து விட்டாள்.

ஒரு நாளும் இத்தனை வேலைகளைச் செய்தறியாத சிறுமியான தால் அன்றைய ஒரு தினத்தோடு தேகம் தளர்ந்து நிலை புரண்டு மயக்க மேலீட்டால் படுத்தவள் வெகு நேரமாகியும் எழுந்திருக்கவே இல்லை. பைசாசத்தினிடம் ஓர் இளங் காரிகை யகப்பட்டுக் கொண் டால் அவள் கதி என்ன வென்று விவரித்துக் கூற வேண்டுமா! பாரதிக்கு அஷ்டமத்துச் சனியன் பிடித்தது போலாயிற்று.

கிணற்றுத் தண்ணீரோ உப்புக் கஷாயம்; சமயல் செய்வதற்கு முதல் சாப்பிடுவதற்கு வரையில் வீட்டிலிருந்து சுமார் அரை மைல் தூரத்திலிருக்கும் ஆற்றிலிருந்து ஜலங் கொண்டு வர வேண்டும். தினம் நிரந்தரமாக உதயத்தில் எழுந்து வீதிக்கு சாணி தெளிப்பது முதல் இரவு கிழவிக்குப் படுக்கை போடும் வேலை வரையில் பாரதியே செய்ய வேண்டு மென்ற திட்டம் வள்ளியம் மாளின் ஆட்சியில் உத்திரவு பிறந்து விட்டது. ஆற்றங்கரைக்கு ஜலத்திற்குச் சென்ருல் இத்தனை நிமிடத்திற்குள் வந்து விட வேண்டும். இல்லையேல் கிழவி பின்னேடு தேடிக் கொண்டு வந்து விடுவாள்.

எதேச்சையாகப் பறந்து கொண்டு மரத்தில் விளையாடிக்கொண் டிருந்த கிளியைக் கூட்டி லடைத்து விட்டால் எப்படி இருக்குமோ அதே மாதிரியாக பாரதியின் நிலைமையாகி விட்டது. தன் கதி இவ் வாருகி விட்டதை எண்ணி அழுவாளா! தன் அண்ணனின் விதி அவ்வாறமைந்ததை நினைத்துக் கலங்குவாளா! தன் தாயின் அநி யாய மரணத்தைச் சிந்தித்துக் கதறுவாளா! தங்கள் பொருட்டு

அபாரமான அன்பு காட்டி உதவிய—இன்னும் அன்பு மயமாக விருக்கும் ராஜசேகரனைப் பற்றித் துயருறுவாளா! இப் பிசாசினிடம் தான் அகப்பட்டதற்காக தேம்பிப் புலம்புவாளா! எதை எண்ணித் தான் விசனிப்பாள்? சதா அழுத கண்ணும், தொழுத கையும், புழுதி மேனியும், கிழிந்த ஆடையும், வழிந்தோடும் விசன வெள் ளமும் ஒன்று கூடி நாளுக்கு நாள் இவளை அடியோடு மெலிந்து துரும் பெனச் செய்து நோயாளியைப் போலாக்கிவிட்டது.

கிழவியின் துணையை விரும்பியதானது கொள்ளிக் கட்டை யினால் தலையைச் சொரிந்து கொண்டது போலாய் விட்டது. தனக்கு இவ்விதமான கதி ஏற்பட்டு விட்ட தென்பதை எவ்விதம் தான் ராஜசேகரனுக்குத் தெரிவிப்பது. கையில் காலணு தனக் கென்ற சுவாதீனம் அற்று விட்டது. கிழவியைக் கேட்டால் அவளா இலேசில் கொடுப்பவள். அதிலும் கடிதத்திற் கென்று கொடுக்கச் சம்மதிப்பாளா! தாமரை இலைத் தண்ணீர் போன்று தத்தளிக் கின்றாள்.

இப்படியே நாட்களோ, ஒன்றிரண்டெனக் கழிந்து மறைந்து கொண்டே போகின்றன. அண்ணனைப் பார்க்க வேண்டு மென்று கிழவியினிடம் சொன்னால் "ஆமாம்! இந்த அழகான அண்ணனைப் பார்க்காமல் தான் குறைவாக இருக்கிறதோ! எல்லாம் குணமானால் தானே வருகிறான். இதற்காக எங்கிருந்து, எங்கு போவது? கிட்டமா, தட்டமா?" என்று ஒரே போடு போட்டு அதட்டி விட்டாள்.

"இத்தகைய அடிமையிலும் அடிமை வாழ்வு வாழ்வதை விடப் பிராணத்தியாகம் செய்து கொள்வதில் என்ன குற்றம்! சீச்சீ! இனி மேல் உயிருக்குத்தான் துணிய வேண்டும்" என்று பாரதி முடிவு கட்டிக் கொண்டாள். சதா காலமும் மாசிலாமணியின் உருவமும் ராஜசேகரனின் உருவமும் கண்ணெதிரில் தோன்றி பாரதியை ஒரு ஆட்டு ஆட்டுகின்றன. தினந்தோறும் தண்ணீர் மொள்ளப் போகும் போதெல்லாம் அங்கு ஒரு நிமிடம் நிற்பதற்கும் பயம். இக் கிழட்டுப் பிணம் எங்கே தேடிக் கொண்டு வந்து விடுமோ! என்று நடுங்குவாள்.

இத்தனை பெரிய உலகத்தில் பக்ஷி இனங்களெல்லாம் நிஷ்க

ளங்கமாகவும் எதேச்சாதிகாரமாகவும் ஓடித் திரியும் இந்த மண்ணில் ஆறறிவு படைத்த மனிதராகப் பிறந்தும் விலங்கினத்தைப் போன்று கூட்டில் கிடக்க விதி நேர்ந்து விட்டதே என்று கண்ணீர் விடுவாள். கும்பல் கும்பலாகப் போகும் பக்ஷிக் கூட்டங்களைக் கண்டு வியந்து பெரு மூச்சு விட்டு ஏங்குவாள். "நான் ஏன் ஒரு காக்காயாய்ப் பிறந்திருக்கலாகாது?'' என்று துக்கிப்பாள். எது செய்து என்ன பயன்?

யாரையேனும் சினேகம் செய்து கொண்டு அவர்கள் மூலமாகத் தன் கஷ்டத்தை நிவர்த்திக்க ராஜசேகரனுக்குச் செய்தி யனுப்பலாம் என்றால் யாரை திடமென்று நம்புவது! இக் காலத்து மக்களில் நூற்றுக்கு ஒருவர்கூட நம்புதற்குரியவராகக் காண்பதரிதாக விருக்கிறது. இவர்களிடம் சிநேகம் போல பாவித்து இங்குள்ள விஷயங்களை எல்லாம் பறித்துக் கோண்டு எதிரியிடம் வத்தி வைத்து முதலுக்கே மோசம் தேடும் புண்ணியாத்மாக்கள் தான் அதிகம்.

பாரதிக்கு, இது விஷயத்தில் நேரில் அனுபவமில்லை எனினும், தன் தாயார் பலரை நம்பி நம்பி பலவிதத்திலும் ஏமாந்தது இவளுக்கு நன்கு தெரியுமாதலால், இவ் விஷயத்தில் மிகவும் முன் யோசனையாக எவரிடத்திலும் வாய் கொடுக்காது இருந்து விட்டாள். ஒரு யுவதியும் யுவனும் இருக்கும் எந்த விடத்திலும் கல்யாணப் பேச்சுக்கள் புறப்படுவது சகஜமல்லவா! "ஏண்டீ! வள்ளியம்மா! உன் காலில் விழுந்துள்ள இப் பெண்ணுக்கு ஒரு முடியைப் போட்டு விட்டால் உன் பளுவு குறைந்து விடுமல்லவா! அதோ அவாள் வீட்டு பிள்ளை, இவாள் வீட்டு பிள்ளை—என்றெல்லாம் சிலர் ஆரம்பித்தார்கள்.

இச் சொல் காதில் விழுந்ததும் பாரதியின் மனது முன்னிலும் பதின் மடங்கு துடித்தது. அடிக்கடி 'அவர்கள் வருகிறார்கள், இவர்கள் வருகிறார்கள்' என்று கூறி, பாரதியை அலங்காரஞ் செய்து காட்சி காட்டுவது போல காட்டத் தொடங்கினாள். இதற்கிசையாவிடின் பலத்த யுத்தந்தான். "இது வரையிலாவது ஏதோ சற்று சகித்திருந்தேன். இனி நம்மை பெரிய கிணற்றில் தள்ள யத்த

னிக்கும் இவர்களுடைய சம்பந்தத்தை விட்டு எப்படியாவது விலகி பிழைக்க மார்க்க மிருப்பின் பிழைப்பது. இன்றேல் ப்ராணனை உடனே த்யாகம் செய்வது!'' என்று சபதம் செய்து கொண்டு, வேளையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்திநேரம். மந்த மாருதம் சிலு சிலுப்புடன் வீசுகின்றது. ஆற்றங்கரையில் தன்னந்தனிமையில் ஒரு புறமாக பாரதி விசனமே வடிவாக உட்கார்ந்திருக்கிறாள். ஏதேச்சாகாரமாக பக்ஷியினங்க ளெல்லாம் உல்லாசமாயும், வெகு குதூகலத்துடனும் பாடிய படியே தம்தம் கூட்டில் வந்து அடைவதும் தம் குஞ்சுகளுக்கு ஆகாரத்தைக் கொடுப்பதுமான காட்சிகள் கண் கொள்ளாத அற்புதமாக விருந்தது.

இந்த ஆநந்தத்தைக் கண்டு மெய் மறந்தபடியே தன்னை மறந்து ஆற்றங்கரையிலேயே உட்கார்ந்து விட்டாள். வீட்டு நினைவே அற்று விட்டது. நேரமோ சென்று கொண்டே இருக்கிறது. பாரதி எந்த உலகத்திலிருக்கிறாள் என்பதே தெரியவில்லை. அச்சமயம் சிறிது தூரத்தில் "ஐயோ!'' என்ற குரல் கேட்டது. அக் குரலைக் கேட்டு, திடுக்கிட்ட பாரதி அப்போது தான் உணர்வு பெற்று, "ஹா! பொழுது நிரம்ப ஆய்விட்டதே! இருள் சூழ்ந்து விட்டதே! கிழவி வந்து விடுவாளே! இதென்ன இப்படி உட்கார்ந்து விட்டோம்...... என்ன...ஐயோ!...ஐயோ!......என்ற குரல் கேட்கிறது......சீச்சீ! என்ன அடிமைத்தனம்! துயரம் மிஞ்சினால் உயிரும் த்ருணமல்லவா! நாம் பட்ட—படும்—கஷ்டங்களை விட இனி ஏதும் மிச்சமில்லை. இதற்கு மேல் தண்டனை உயிர் போவது தானே!...சந்தோஷம். அதையே நான் எதிர் பார்க்கிறேன். இக் குரல் எங்கிருந்து வருகிறது பார்ப்போம். ஒரு விதத்திலும், ஒருவருக்கும் உபகாரமற்ற இக் கட்டை எதற்கும் இனி துணிய வேண்டியதுதான்'' என்று தீர்மானித்து எழுந்து, சப்தம் வந்த திக்கை நோக்கி நடக்கலானாள்.

## 10-வது அதிகாரம்

### நீதிக்குமுண்டோ ஆதரவின்மை!

உலகத்து நிலைமையைப் பலவிதத்திலும் அறிந்து கொள்ளாத சிறுவனாயினும் இச் சந்தர்ப்பத்தில் நமது ராஜசேகரனுக்கு தன் தாதாவுக்கு எப்படி இருக்கிறதோ என்கிற கவலையொருபுறம்; இவர்கள் சுற்றி நிற்பதும், சிலர் "ராஜா! இவள் யாரு?" என்று கேட்போருக்குப் பதில் கூற மாட்டாது திண்டாடுவது ஓர் புறம் பாதிக்க இவன் முதலில் இறங்கித் தன்னுடன் வந்தவர்களில் ஒருவரிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு, காமுவைத் தூக்கிகொண்டுபோய்ப் பின்புறத்து நடையுள்ளில் கொண்டு விட்டுப் பிறகு அந்த வண்டியிலேயே அவ்விருவரையும் ஏற்றி அனுப்பிவிட்டான்.

ராஜா அழைத்து வந்தது யார் என்று ஒவ்வொருவரும் விசாரித்துக்கொண்டு வீட்டிற்கும் வரத் தொடங்கிவிட்டார்கள். அச்செய்கை ராஜனின் மனத்தைப் பிளக்கிறது. அவனுடைய மாமனின் மனைவி "இவளார்? என்று விரைக்க விரைக்கப் பார்க்க வாரம்பித்தாள். ராஜன் வெகு பதைப்புடன் முதலில் தன் பாட்டனாரிடம் சென்றான். அவருக்கு உடம்பு தடபுடலான நிலைமையில்தானிருக்கிறது. பக்கத்தில் முக்கியமான சிலர் உட்கார்ந்திருந்தார்கள். கிழவரின் அருகில் சென்று அவரைத் தடவிப் பார்த்தான். "தாதா! தாதா! இதோ நான் வந்துவிட்டேன். என்னைப் பாருங்கள். கண்ணைத் திறவுங்கள்" என்று கண்ணீர் பெருகக் கூப்பிட்டான்.

கிழவர் புத்திரவாஞ்சையை விட அதிகமாக வாஞ்சையுடன் வளர்த்த ராஜனின் குரலைக் கேட்டதும், கண்ணைத் திறந்து பார்த்தார். அன்போடு ராஜனை அணைத்துக்கொண்டு தடவினார். பேச மாத்திரம் முடியவில்லை. ஆசிர்வதித்தார். அருகிலிருந்த கிழங்கள் "அப்பா!

தாதாவிடமே உட்காரடா! அவரும் இனி உன்னை விட்டு மறைந்து விடப்போகிறார். அவருக்கு மனத்திருப்தியாக அருகிலேயே இருந்துவிடு'' என்றார்கள்.

இதைக்கேட்ட ராஜனுக்கு, கிழவர் நிலைமை ஒருபுறம் பாதிப்ப தோடு காமுவின் வரலாறறியாத நிலைமை மிகவும் பாதித்து வருத்து கிறது. ஆதலால் அங்கு சிறிது நேரம் நின்றுவிட்டுப் பிறகு காமு விடம் வந்தான். இதற்குள் சில பெண்பிள்ளைகள்—வம்புக்கென்று வாயை—நாக்கை—தீட்டி வைத்திருக்கும் மகராஜிகள் — அங்கு எட்டி எட்டிப் பார்க்கிறார்கள். குசு குசுவென்று பேசுகிறார்கள். ராஜன் இதைக் கவனித்து "இதென்ன வேடிக்கை. அனாதைப் பரதே சியை வேடிக்கை பார்ப்பதும் ஓர் சந்தோஷமா! விலகுங்கள்'' என்று கூறி விலக்கினான்.

அவ்வீட்டில் ராஜன் பிறப்பதற்கு முன்பிருந்து வேலை செய் யும் மங்கத்தாயி என்ற வேலைக்காரி பழுத்த கிழமாயும் அவ்வீட்டி லேயே இன்னும் இருக்கிறாள். ராஜனைத் தூக்கிச் சுமந்து வாஞ்சை யோடு நீராட்டி, தாலாட்டி, பாலூட்டி வளர்த்த பங்கில் அவளும் ஒரு பாகம் பெற்று வந்ததால் அவளுக்கு எல்லோரையும் விட அவன்மீது தனித்த வாஞ்சையுண்டு. ஆதலால் அவளை நோக்கி ராஜன் "மங்கத் தாயீ! எனக்கு நீ யொரு உதவி செய்யவேண்டும். வித்யாசமாக எண் ணாதே! என்னுடைய பாட்டியார் எப்படியோ அதே போன்று நீயும் எனக்கு ஒருத்தியாகையினால் உன்னிடமே நான் உதவியைக் கோருகிறேன்.

இதோ இந்தப் பெண் யாரோ, என்னவோ எனக்கு ஒரு விஷ யமும் தெரியாது. விவரமறியாவிடினும் இவள் அனாதை என்பதையும் பேராபத்தில் சிக்கி இருக்கிறாள் என்பதையும் அறிந்து அவ்வாபத்தி லிருந்து தப்பிக்கச்செய்து உதவி புரிந்து இங்கு கொண்டுவந்துவிட் டேன். இந்த மூட ஜனங்கள் விரைக்க விரைக்கப் பார்க்கிறார்கள். இந்தம்மாளையும், குழந்தையையும் நீதான் தாய்போல இனி கவனிக்க வேண்டும். நான் சென்று நமது அங்கமுத்துவை அழைத்துகொண்டு வருகிறேன்'' என்று கூறி, மங்கத்தாயைக் காமுவின் பக்கத்தில் உட்

கார வைத்துவிட்டு அவன் சென்று மருத்துவன் அங்கமுத்துவை புறக்கடை வழியாலேயே அழைத்து வந்தான்.

அவன் வந்து காமுவைப் பார்த்ததும் சற்று திகைத்தான். "ராஜா! ப்ரஸவித்தவர்களுக்குப் பலவிதமான ஜன்னியுண்டு. அதில் இது மயக்க ஜன்னி சீதளம் முட்டிக்கொண்டு வருகிறது. அதோடு மிக மிக அதிர்ச்சிப்பட்டு இதயத்தில் ரத்த வேகமும் படபடப்பும் அதிகமாகிவிட்டது. வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். தப்புவது கஷ்டந்தான்" என்று வைத்திய முறைப்படி முடுக்காகக் கூறிவிட்டான். உடனே ஏதேதோ மருந்துகளெல்லாம் கொடுத்தான். கஷாயம், கல்கம் முதலியவைகளையும் ப்ரயோகித்தான். குழந்தைக்கும் சில மருந்துகளைக் கொடுத்தான்.

காமுவோ கண்ணையே திறக்கவில்லை. குழந்தை மட்டும் மென்னியை இறுத்திய வேகத்தினால் நெஞ்சடைத்தார்ப்போல சற்று குரலைக் காட்டி யழுதது. ராஜன் சற்று தன் தாதாவைப் பார்ப்பதும் சற்று காமுவை பார்ப்பதுமாக விருக்கிறான். ஊர் ஜனங்களோ இந்தக் காட்சியை பெரிய கண்காட்சியாக எண்ணிவிட்டதோடு ராஜனைப் பிச்சிவிடத் தொடங்கினார்கள். "ஒரு குழந்தையும் தாயுமாக இவள் எப்படி இங்கு வந்தாள்" என்று நேரிலேயே கேட்கிறார்கள்.

ராஜனுக்கோ இந்த உபத்திரவம் தாங்கமுடியவில்லை. அவளொரு அனாதை என்றால் ஒருவராவது நம்பவில்லை. "இதேதோ சூது செய்கிறாய். இவள் உண்மையில் யாரோ தேவடியாளோ! குச்சுக்காரியோ! ஓடிவிட்ட கழுதையோ! திருட்டுக் குட்டி தள்ளியவளோ! என்னவோ தெரியவில்லை? ராஜனின் வைப்பாட்டியாகத்தானிருக்க வேண்டும்." என்றெல்லாம் ஒருவருக்கொருவர் பலமாகப் பேசிக் கொள்ள வாரம்பித்துவிட்டார்கள்.

இவைகள் ராஜன் காதில் விழாமலில்லை. ஆனால் அவைகளை அவன் பொருட்படுத்தவில்லை. மங்கத்தாயி இருவரையும் வெகு அன்போடு கவனித்து வந்தாள். இரவு நடுநிசியில் காமு சற்று கண்ணைத் திறந்தாள். இவளுடைய நினைவு முற்றும் தன் குழந்தையின் மீதே

இருந்ததால் "ஐயோ! கொலை செய்யவேண்டாம். கொல்ல வேண்டாம். என் குழந்தையை இப்படிக் கொடுங்கள். ஹா! குழந்தை! குழந்தை. என்னுடைய குழந்தை. எங்கே! ஐயோ! கண்ணில் படவில்லையே! குழியில் போட்டுவிட்டீர்களா!"......என்று திக்கித் திக்கி ஒவ்வொரு வார்த்தையாகக் கேட்டாள்.

ராஜன் வெகு பக்ஷத்துடன் "சகோதரி! பயப்படாதே! உன் குழந்தை நன்றாக உயிருடன் இருக்கிறது. இறக்கவில்லை. கொலை செய்யவில்லை. கடவுள் காப்பாற்றினார். இதோ உங்கள் குழந்தையைப் பாருங்கள். உங்கள் கையை நீட்டித் தடவுங்கள்" என்று வெகு பக்ஷத்துடன் கூறினான். இதைக் கேட்ட அவள் தன்னையே நம்பவில்லை. குழவியைப் பார்க்கமுடியாது கண்ணில் ஜலம் தாரையாகப் பெருகுகிறது. "ஆ! என் குழந்தை உயிருடனிருக்கின்றதா? எதோ, எதோ! அக் கொடிய அரக்கி எங்கே! அக்கொடிய வண்டிக்காரன் எங்கே? அஞ்சா நெஞ்சம் படைத்த என் தாயார் எங்கே? அந்தக் குழியில்......போடவில்லையே!" என்று மனந் துடிக்க ஆத்திரத்துடன் கேட்டாள்.

இதைக்கேட்ட ராஜனின் மனங்கலங்கியது. அவள் அன்னியப் பெண்மணி. அதிலும் பிரஸவித்தவள். அவளருகில் தான் எவ்வாறு நின்று பேசுவது என்பதையே மறந்தான். களங்கமற்ற நிஷ்களங்கமான இதயத்துடன் அன்பையும் கருணையையுமே கவனித்தான். பரிசுத்த பார்வையோடு அம்மாதை நோக்கி "சகோதரி! உன் தாயாரா! அது யார்! எனக்கு உன் விவரம் ஒன்றுமே தெரியவில்லை. உன்னுடைய கண்றாவியான நிலைமையைக் கண்டு என் மனந் தாங்காது துணிந்து முன் வந்து உன் குழந்தையைக் காப்பாற்றும் தைரியத்தை ஈசன் எனக்களித்தார். அதனால் நீயும், உன் குழந்தையும் எமனிட மிருந்து காக்கப்பட்டீர்கள். இதோ பாரம்மா! உன் குழந்தை...மங்கத்தாயி! குழந்தையை இப்படிக் கொடு" என்றான்.

இம் மொழியைக் கேட்ட காமு கட்டு மீறிய ஆநந்தத்தோடு தன்னிலை மறந்த ஆவேசமாக திடீரென்று துள்ளி எழுந்து உட்கார்ந்து "எங்கே! எங்கே! என் குழந்தை?" என்று கூவியவாறு மங்

கத்தாயியின் கையிலிருந்து வாங்கி முகத்தோடு முகம் வைத்து முத்த மிட்டு மார்போடு அணைத்துக்கொண்டாள். அவளுடைய பலஹீன மான நிலைமையில் இந்த அளப்பரிய சந்தோஷந் தாங்கமாட்டாது குழந்தையை அணைத்தபடியே மீண்டும் கீழே சாய்ந்தாள்.

உடனே மங்கத்தாயி குழந்தையைத் தாங்கிக்கொண்டு காமுவுக்கு தண்ணீர் வார்த்து உபசரித்தாள். ஆநந்த மேலீட்டால் உண்டாகிய களைப்பானதால் அவளுக்குச் சற்று நேரத்தில் தெளிவு உண்டாகிவிட்டது. மீண்டும் குழந்தையைத் தன் பக்கலில் விடச் செய்து சேர்த்து அணைத்து முகம் பதித்துக் கொண்டாள். சில நிமிடம் அசைவற்றுப் படுத்திருந்தாள். அவளுடைய கண்கள் மாரியைப் பொழிந்தன. மெல்ல தன்னைச் சமாளித்துக் கொண்டு, "ஹா! இதென்ன நான் மகா தப்பிதம் செய்துவிட்டேனே! "எந்நன்றி கொன்றார்க்கும்; உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வாக்கை மறந்து என் சொந்த ஆநந்தத்திலிருந்துவிட்டேனே!

ஐயா! என் பொருட்டாக தாங்கள் செய்த பேருதவிக்கு நான் என்ன பதில் கூறுவேன்? எப்படி என்னுடைய நன்றி விசுவாசத்தைக் காட்டுவேன்? என் விஷயத்தில் கடவுள் நீங்கள்தான். எனக்கு வேறு கடவுளே இல்லை. ஐயா! என் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய புண்ணியம் உங்களுக்கு என்றும் உண்டாகும். இவ் வனுதையினுடைய சரிதையைக் கேட்டால்—மடத்தன்மையின் கொடுமையினுல் அழிந்ததைக் கேட்டால்—கல்லுங் கரையும்; மலையும் உருகும். சமர்த்தர் கண்டால் பரிகஸிப்பார். எதிரிகளும் ஏளனஞ் செய்வார்கள். இத்தனை மதிப்புள்ளது என் பிழைப்பு. இப்பாவிக்கு உதவி செய்த தங்களின் அருமையான, விலையற்ற மாணிக்கம் போன்ற குணத்திற்கு என்ன கைம்மாறுதான் செய்வேன்?" என்கிறுள். மேலே கூற முடியாது, கண்ணீர் பெருக துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது. தேகம் குலுங்கப் புலம்பியபடியே மீண்டும் அசைவற்று விட்டாள்.

இந்தக் கோர சம்பவத்தைக் கண்டும்,விவரம் விளங்காத விஷயத்தைக் கேட்டும் ராஜசேகரனின் மனம் தத்தளித்தது. "ஐயோ! ஏதோ

இப் பெண்மணி மடத்தன்மையினால், அறியாமையினால் நொந்து விட்டாள் என்று தெரிகிறது. பாவம்! உம். விஷயத்தை முதலில் அறிவோம். ஒருகால் ஏதேனும் மர்மமானதாக இருக்கலாம். அதனால் அன்னியர் எதிரில் சொல்ல லஜ்ஜையோ, துக்கமோ இருக்கலாம். மங்கத்தாயியை அனுப்பிவிடுவோம். பிறகு நாம் கேட்டுப் பார்க்கலாம்'' என்று எண்ணியவனாய் மங்கத்தாயியை நோக்கி "தாயீ! நீ சென்று முதலில் நல்ல கஞ்சி வைத்துக்கொண்டு வருவதோடு இக் குழந்தைக்கு நல்ல பசுவின் பால் கொஞ்சம் கொண்டு வந்து போட்டு'' என்றான். சூது வாதறியாத கபடமற்ற மங்கத்தாயி எழுந்து போய்விட்டாள்.

பிறகு ராஜசேகரன் காமுவின் அருகில் அமர்ந்து "என்னரிய சகோதரீ! உன்னை நான் முன்பின்னறியாவிடினும் அந்த இரவு நடந்த கொடூரச் செய்கைகளை நினைத்தால் இன்னமும் தேகம் பதறுகிறது. அந்தக் கோரமான காட்சியைக் கண்டு சகிக்கமாட்டாது, நான் உன் குழந்தையைக் காக்கும் பொருட்டு அவர்களை நன்றாக அடித்து விட்டேன். அவர்கள் பிழைத்தார்களோ! பரலோகம் போனார்களோ அது தெரியாது. அச் சமயம் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இப்போது நீ உன் குழந்தையுடன் சந்தோஷப்படுவதைப் பார்க்க என்னுடைய மனம் பொங்குகிறது. இது போதும். உன் வரலாறு என்று கூறினாயே அது ஒன்றும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிவிக்கலாமாயின் உன் விஷயத்தைத் தெரிவி. மேலும் அப்போது நீ மயக்கத்தினால் ப்ரக்ஞையற்றுக் கிடந்ததால் உன்னை எந்த இடத்தில் எங்கு கொண்டு விடவேண்டும் என்றது எனக்குத் தெரியாது போயிற்று. ஆதலால் என் வீட்டிற்கே கொண்டு வந்து விட்டேன். ஓர் உயிரைக் காக்கும் ஒரே நோக்கத்தில் நான் எந்த எதிர் காலத்து விஷயங்களையும் யோசிக்கவே இல்லை. தயவு செய்து உன் வரலாற்றையும், உன்னை எங்கு கொண்டு விடவேண்டுமென்பதையும், உன் மனிதர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்தால் நான் தகவல் கொடுத்து வரவழைக்கின்றேன் அல்லது அங்கு கொண்டு விடுகிறேன் என்று வெகு ப்ரீதியுடன் கேட்டான்.

இதைக் கேட்ட காமு கண்ணீர் பெருக, மனந்தவித்தவாறு ராஜ

சேகரனுடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, "அண்ணு! என்னுடன் பிறக்காவிடினும் உதவிக்கென முன்னுல் பிறந்திருக்கும் அண்ணு! என்னுயிரினு மினிய குழந்தையைக் காப்பாற்றி எமன் கையிலிருந்து வாங்கிக் கொடுத்த தமக்கு நான் என் வரலாற்றை ஒளித்தேனே யானுல் சண்டாளியிலும் சண்டாளியாவே னல்லவா! அண்ணு! என் சரித்திரத்தைக் கேட்ட பிறகு என்னைக் காரியுமிழ மாட்டீர்களே? கை கொட்டி, நகைத்து, மனங் கசந்து வெறுக்க மாட்டீர்களே? அண்ணு! என்னைக் காப்பாற்றிய பெருமானே! இதோ என் வாழ்வின் வைபவத்தையும் கூறிவிடுகிறேன் கேளுங்கள்" என்று தன்னுடைய சகல விஷயங்களையும் திணறித் திணறிக் கூறி முடித்து தன் முகத்தை மூடிக்கொண்டு புலம்பினுள்.

இக் கொடிய மனங் தாளாத வரலாற்றைக் கேட்ட ராஜசேகரனுக்கு "ஹா! என்ன! என்ன! பொன்னுசாமியா! பொன்னுசாமியினுலா உன் வாழ்வு பாழ் பட்டுவிட்டது. அந்த அயோக்யப் பயலின் சகவாசத்தினுலா நீ இக்கதிக்கு வந்தாய்? ஐயோ! அப் படு பர்வியின் செய்தி உலகமே அறியுமே. பெண்களைக் கற்பழித்து நிர்ப்பாக்கியமாகத் தெருவில் விடும் மகா புண்ணியவானுயிற்றே! என் சகோதரீ! பெரியார் வைத்திருக்கும் கட்டளையின் உண்மை மேன்மை, ஆழ்ந்த கருத்தின் தத்துவம் இப்போது தெரிந்ததா! நெருங்கிப் பழகுவதன் பயன் இதுதான். உம். புண்ணில் கோலிடுவது போல நான் கூறுவது மகா பிசகு. அம்மா! அந்த அயோக்கியப் பயல் யார் தெரியுமா! என்னைப் பெற்ற பிதா என் தாயை இழந்து பின் மறு விவாகம் ஓர் பர தேவதையை மணம் செய்துகொண்டிருக்கிருர். அந்த புண்ணியவதியின் சகோதரன் அந்தப் படுபாவி. அடாடா! அந்த மாய வலையில்—தீய படுகுழியில், மோசக் கிணற்றிலா—நீ விழுந்து வாழ்க்கையை மடித்துக்கொண்டாய். காரியந் தான் வரம்பு மீறிக் கெட்டுவிட்டது. அதோடு இக் கொலையையுமா செய்ய முதலில் நீ சம்மதித்தாய்?" என்று மிக விசனத்துடன் கேட்டான்.

இதைக் கேட்ட கர்மு, ஈனக் குரலுடன் புலம்பியபடியே "அண்ணு! என் விதி என்னை முற்றிலும் கெடுத்துவிட்ட தெனினும்

கொலை செய்ய நான் ஒரு சிறிதும் கனவிலும் நினைக்கவில்லை. இவ் விதம் என் தாயார் செய்ய எண்ணி இருக்கிருள் என்பதுவும் எனக்கு சொப்பனத்திலும் தெரியாது. என் கால விதியைக் கண்டு ஜனங்கள் இழிவாகக் கூறியதால் என் தாய் மனம் நொந்து என்னை எங்கோ தன் சிற்றன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்கிருள் என்றும் அங்கு இக் குழந்தையை ரகஸியமாக வளர்ப்பாள் என்றே அன்றி என்னைத் தனியே குழந்தையோடு தள்ளிவிடுவார்க ளென்றே எப்படி எப்படியோ எண்ணினேன். இம்மாதிரியான காரியங்களைச் செய்வார்களென்று நான் முன்பே தெரிந்திருந்தேனேயானல் நான் அப்போதே பகிரங்கமாக விலகி இருந்து எனக்கு இவ்வாபத்து நேராமல் பார்த்துக் கொண்டிருப்பேன். ஏதோ எனக்கும் கடவுள் சகாயம் செய்யும் எண்ணத்துடன் இருக்கிருர் என்பதை உங்கள் உதவியின் மூலம் காட்டிவிட்டார்'' என்று கூறிக் கண்ணீர் வடித் தாள்.

புண் பட்டு நொந்துபோன மனத்துடனிருக்கும் காமுவிடம் இன்னும் என்ன பேச முடியும். அவளுடைய பார்வையின் தோற்ற மானது தன்னைப் பற்றி ராஜசேகரன் என்ன இழிவாகவோ—கேவல மாகவோ—எண்ணிவிடுகிருனே! வாயிலிருந்து என்ன சொல் வருமோ என்று எதிர்பார்த்துப் பயப்படுவது போலத் தோன்றியது. இதை யறிந்த ராஜன் "அம்மணி! கண்ணீர் விடாதே! உன் கதியும், விதியும், மதி யிழந்ததின் சதியும் ஒன்று கூடி உன்னைப் பாழ் படுத் திய தெனினும் இதற்கு முற்றிலும் காரணம் அந்தப் படுபாவி மகன் தான் என்பது என்னுள்ளம் அறிகிறது.

அம்மணி! உன்னை நான் இகழ்ச்சியாக மதித்து ஏசமாட் டேன். துச்சமாகப் பேசமாட்டேன். உன் தாயார் அங்கிருக்கிருள் என்பது எனக்குத் தெரியாதாகையால், உன்னை எவ்விதமேனும் காப் பாற்றினல் போதும் என்கிற நோக்கத்துடன் உன்னையும் உன் குழந் தையையும் தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன். உன்னை நான் அனு தையாகத் தெருவில் விடமாட்டேன். இதை நிச்சயமாக நம்பு. அங்கு உன்னைக் காணுமல் உன் தாயார் உன்னைத் தேடி யலைவாள். அம்மாதிரி அவள் தகவல் தெரிந்துகொண்டு வரும் வரையிலோ,

அல்லது நானகவே அவர்களைப் பற்றி விசாரித்து, தேடிக் கண்டு பிடித்தோ பிறகு உன்னையும் உன் குழந்தையையும் அவர்களிடம் சேர்ப்பிக்கின்றேன். அதுவரையில் நீ இவ்விடத்திலேயே இரு. இதனல் எனக்கு எவ்வித கஷ்டமும் இல்லை. அவ்வாறு இருப்பினும் நான் என் கடமையினல் சகித்துக்கொள்கிறேன். கவலைப்படாதே யம்மா!

உன்னுடைய கபடமற்ற மனத்தில் கற்பு விஷயத்திலும் சிறிது உறுதி இருக்குமாயின் எத்தனையோ மேன்மையாக விளங்கி இருப் பாய். அக் கயவனிடத்தில் அதிக நம்பிக்கை கொண்டு நீ அனியாய மாகிவிட்டதுதான் மறக்கக்கூடாத விசனமாக விருக்கிறது. உம். இனி அதை நினைத்துப் பலனில்லை. உன்னைப் போன்ற மற்ற பெண்க ளும் இம்மாதிரி கெடாதிருக்க இது உனக்குப் பாடமாகியது போதும்" என்று ஏதோ நினைவாக வாய்விட்டுக் கூறிவிட்டான்.

உடனே தன்னையே வெறுத்து மனந் தவித்தான். "சீச்சி! புண் பட்ட மனத்தை நாம் மீண்டும் கலங்க வைத்துவிட்டோமே" என்று கவலைப்பட்டான். உடனே காமுவை நோக்கி "சகோதரீ! கற்றும் கல்லாத மடயன் போலானேன்: ஏதோ உளறிவிட்டேன். அதை மனத்தில் வைத்துக்கொள்ளாதே: விதியை வெல்பவர்கள் யாருள் ளார்கள். கவலைப்படாதே: என்னை உன் சகோதரனுக நம்பு" என்று கூறித் தேற்றினன். பின்னும் பல தேறுதல் மொழிகளால் உபசரித் தான்.

இதற்குள் மங்கத்தாயி கஞ்சி கொண்டு வந்து கொடுத்தாள். குழந்தைக்கும் பால் கொடுத்தாள். இவளுடைய நிலைமை இங்ஙன மிருக்க, ராஜசேகரனின் தர்தாவின் நிலைமையோ மிகவும் கேவலமாகிக் கொண்டே வருகிறது. அது ஒரு புறம் ராஜனின் விசனத்தைப் பெருக்குகின்றது. ஊர் ஜனங்களின் கோனிஷ்டையைக் கேட்க வேண்டுமா! கூடிக் கூடிப் பேசி குசமச மந்திர ஜபம் செய்யத் தலைப் பட்டார்கள். கோயில், குளம், தெருவு எங்கு பார்த்தாலும் இதே பேச்சுதான். ராஜன் நல்ல பையன். நல்ல பையன் என்று கூறிய காலமெல்லாம் மலையேறிவிட்டது. அவன் மகா அயோக்யன்; எவ ளையோ வீட்டிற்குக் குழந்தையோடு இழுத்துக்கொண்டுவந்து விட்

டான். இது மகா அக்ரமம், கேட்பார் புடைப்பார் இல்லை'' என்று தாறுமாருகக் கத்துகிருர்கள்.

ராஜசேகரனின் காதில் இக் கடுமொழி சுடுசரம் போல் விழாம லில்லை. என்ன பதில் சரியான உண்மைகளைக் கூறியும் கேட்கவில்லை. கர்முவை ராஜசேகரனின் வைப்பாட்டி என்றும் இக் குழந்தையும் இவனுடையதே என்றும் ஊர் ஜனங்கள் தீர்மானமாகக் கூறிவிட் டார்கள்.

ராஜசேகரனின் மாமன் மனைவியினிடத்தில் அக்கம் பக்கத்துப் பெருமாட்டிகள் வந்து "ஏண்டீ கனகாம்பரம்! இதென்ன அனியா யம்! இந்த மொட்டைப் பயல் இவ்விதம் பகிரங்கமாக ஒரு குச்சுக் காரியை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பது, இதை நீங்கள் கண் டிக்காது பேசாதிருந்தால் நியாயமா! இந்த அக்கிரமத்தைக் கேட் பார் கிடையாதோ? உங்கள் தருமமென்ன; நீதி என்ன; நெறி என்ன! இவைகளை எல்லாம் சற்றும் கவனியாது அக்ரமத்திற்குக் கூட இடங் கொடுப்பாருண்டா? உங்கள் வீட்டில் யார் கையை நனைப் பார்கள். வெகு அழகு. ஊர் சிரிக்கிறது. நாடு நகைக்கிறது. அவ னுக்கு உடம்பில் சூடு சுரணை இருக்கிறதா? மானங் கெட்ட பேமா னியை வீட்டை விட்டு ஓட்டாமல் கூட இருப்பார்களா? செல் லங் கொடுத்து வளர்த்த பிள்ளையா யிருந்தால் இதற்குக் கூடவா செல்லம்?'' என்று மெல்ல வத்தி வைத்துவிட்டார்கள்.

ஏற்கெனவே இவர்களின் சகவாஸத்தினுல் வம்பர் மகர் சபை யின் அங்கத்தினராகச் சேரும் மகா பேறு பெற்றிருக்கும் இந்தம்மா ளின் காதில் இம் மொழிகள் விழுந்தவுடனே திம் திம் என்று ஆடத் தொடங்கிவிட்டாள். கிழம் ஒரு புறம் காலைக் கிளப்ப இருக்கி றது. வீட்டில் திமிர்தண்டப்படுகிறது. இந்நிலைமையில் வைப்பாட் டியையும், குச்சுக்கார முண்டையையும், திருட்டுக் குட்டி போட்ட கழுதையையும் வீட்டில் வைத்துக்கொண்டு இழ வெடுக்க எனக்கு என்ன தலைவிதியா? இந்த அனியாயம் எங்கு அடுக்கும்?

அடேய் ராஜா! உன்னை நான் மிகவும் யோக்கிய னென்று

நம்பினேன். இந்த மாதிரி அக்ரமத்தில் நீ பிரவேசித்ததுமன்னியில் வெட்கமின்றி இவ்விதம் அந்த முண்டையை இங்கு கொண்டுவந்து வைத்து ஊர் சிரிக்கச் செய்வது சுத்த வெட்கக்கேடு. உலகத்தி லேயே ஒப்பாதது. முதலில் அவளை விரட்டுகிறாயா இல்லாவிடில் நானே சாணியைக் கரைத்துத், தலையில் கொட்டி, துடைப்பத்தால் அடித் துக் காரியுமிழ்ந்து விரட்டுவேன். என்ன சொல்கிறாய்? ஊம்.'' என்று கர்ஜித்தாள். இதைக் கேட்ட ராஜனின் மனம் எப்படித்தான் தவித் திருக்கும்? ஆண் சிங்கமாயினும் படாப் பழியைக் கேட்டதும்—அனு தியான காமுவை நினைத்ததும்—கதி கலங்கிவிட்டான். "ஆகா! நீதிக்கு முண்டோ; ஆதரவின்மை! என்ன அனியாயம்'' என்று தவித்தான்.

ராஜசேகரன் மாமியின் காலில் விழுந்து வணங்கி வெகு தாழ்மையோடு பேசத் தொடங்கி "மாமீ! இம்மாதிரி நீ சொல்வது சற்றும் சரி இல்லை. கடவுள் மீது ஆணையாக—சத்தியமாக—அந்தப் பெண் திக்கற்ற அனாதை. அவளுடைய வரலாற்றைக் கேட்டால் பட்ட மரமும் பால் வடிக்கும் என்றால் ஆறறிவு படைத்த மனிதர்க ளுக்கு இரக்கமும் நீதியும் கிடையாதா! நீதிக்குக்கூட ஆதரவில்லை என்பது தருமமா! என் மீது அபாண்ட வார்த்தைகளைக் கூறாதே; எனக்குத் தாயிக்கு;தாயாயும், சகோதரியாயும் உபசரித்த நீயே இவ் வாறு கூறுவது கேவலமாகும்'' என்று அவன் மேலே கூறி முடிப்ப தற்குள்,

கனகாம்பரத்திற்கு அதிக கோபம் உண்டாகிவிட்டது. கையை யும், காலையும் ஆட்டி "போதுமடா உன் பிரஸங்கம். சத்தாக விருந் தால் எல்லாந்தான் செய்யலாம். தாயா யிருக்கலாம். தந்தையாக விருக்கலாம். அசத்தாக விருப்போருக்கு உடந்தையாக இருக்கத் தூண்டுகிறாயோ! வெட்கங் கெட்டவனே! இந்த ஜாலமெல்லாம் எதற்கு? இம் முண்டையை வெளியே துரத்துகிறாயா! சாணியைக் கொண்டு வரட்டுமா?''என்று மறு பேச்சை எதிர்பார்க்காது ஓடினாள்.

இதற்குள் கிழவருக்குத் தடபுடலாகி விட்டது. பெருத்த அமளி யாக விருக்கிறது. ராஜசேகரன் என்ன செய்வான் பாவம். இவ் வறு

தையைக் கைவிடவும் மனம் சகிக்கவில்லை. வீட்டில் சமயமோ பெருத்த கஷ்டமாக விருக்கிறது. மெல்லவும் கூடாது விழுங்கவும் கூடாது தவிக்கின்றான். இந்த விபரீதச் சொற்கள் மனப் பிணியும் தேகப் பிணியும் ஒன்று கூடி பாதிக்கும் காமுவின் காதில் கேட்டு விட்டால் என்ன செய்வது என்ற கவலையும் பாதிக்கிறது. இத்தனை வேதனைக்கு மத்தியில் தன் மாமி தெரிவித்தது போல எந்த நேரம் என்ன செய்துவிடுவாளோ என்கிற திகிலும், பயமும் வதைக்கின்றன.

கனகாம்பரம் ஆவேசத்துடன் மங்கத்தாயியை அழைத்து "படவா முண்டை! கிழட்டுப் பிணமே! திருட்டுக் குட்டி போட்ட கங்காலுக்கு, கழுசாக் கடைக்கு நீயும் இம் மொட்டைப் பையனுடன் கூடிக்கொண்டு உடந்தையா யிருக்கிறாயா! சீச்சீ! வெளியே எழுந்து வா. இத்தகைய அனியாயத்திற்கு உடந்தையாக இருந்தால் நீ இக்ஷணமே வீட்டை விட்டுப் போய்விடு" என்று அதட்டி மிரட்டுவதைப் பார்த்த ராஜசேகரனின் மனம் பதறுகிறது. இந்த நிலைமையோடு அன்று செல்ல மறு தினம் வந்தது.

மறு தினம் கிழவருக்கு முடிவு நேரிட்டுவிட்டதால் இவ்வுடலையும் உலகத்தையும் நீத்து மறைந்துவிட்டார். தாய்போல அன்பாக விருந்த தன் பாட்டனார் உயிர் நீத்தது ராஜசேரகனின் துக்கத்தை யதிகரிக்கச் செய்துவிட்டது. தன் தயாார் அன்றே இறந்துவிட்ட அத்தனை விசனம் உண்டாகிவிட்டது; முட்டிக்கொண்டு அழுதான். பாரதி அன்று தன் தாயின் சவத்தின்மீது விழுந்து புரண்டதையும் துக்கித்ததையும் நினைத்து வருந்தினான்.

வீடு இந்த நிலைமையிலிருக்க, அவ்வூரிலோ குழப்பமும் பேச்சுக்களும் வலுத்துவிட்டன. "சாவுக்கு கட்டுப்பாடாக யாரும் போகக்கூடாது. அவர்கள் வீட்டு மகன் அக்கிரமம் செய்துவிட்டான். இந்த அனியாயத்தைக் கண்டிக்க வேண்டி எல்லோரும் கட்டுப்போடவேண்டும். பிணத்தை எடுக்க யாரும் செல்லலாகாது" என்று ஓர் முடிவு செய்துகொண்டு கட்டுப்பாடாக நின்றுவிட்டார்கள்.

இச் செய்தி இவ்வீட்டிற்கு உடனே எட்டிவிட்டது. ராஜனின் பாட்டிக்கும் இச் செய்தி முன்பே தெரியுமெனினும் கிழவரின் தேக நிலைமையிலேயே நினைவாக இருந்துவிட்டாள். இதை நேரில் கண்டிக்கவில்லை. அவளுக்கு தன் கணவன் கிழவராகவிருப்பினும் உயிர்விட மனம் வராது புலம்பினர். அச்சமயம் இத்தகைய கட்டுப்பாடான விஷயத்தையும், விபரீத சம்பவத்தையுங் கேட்டு அபாரமான கோபம் வந்துவிட்டது. தன் புதல்வனை விட அதிகமான அன்புடன் அவனை வளர்த்தவளாயினும் இச் செய்கை அவளை மீறிய ஆத்திரத்தை யுண்டாக்கிவிட்டது. வெகு வெகு காலமாக தன் குடும்பத்திற்கு ஒரு விதமான மருவுமின்றி இருந்த புகழ் மறைய இன்று இந்த ப்ரம்மாண்டமான அழுக்கும் இழிவும் அவமானமும் உண்டாகிவிட்டதானது தன் கணவன் இறந்த துயரத்தைவிட பெரிய வெட்கமும், துக்கமும் பொங்கிவிட்டன.

அவளால் தாங்க முடியவில்லை. உடனே ராஜனை யழைத்து வாயில் வந்தபடி எல்லாம் தாறுமாறுகத் திட்டி, கூச்சலிட்டு "நீ இத்தகைய காரியத்தைச் செய்ததனுலல்லவா நம் குலப் பெருமை போயிற்று. நம் முன்னேர்களின் மகிமையும் இதுகால பரியந்தம் நாம் வாழ்ந்த கண்ணியமும் போய்விட்டன. தலை காட்டக் கூடாத அவமானத்தை யுண்டாக்கிவிட்டாய். உனக்காக எங்கள் சோற்றில் மண்ணைப் போட்டுச் சுருக்கிக்கொண்டு படிக்க வைத்து அறிவை விருத்தி செய்ததெல்லாம் இத்தகைய சாக்கடையில் விழவா பயன் செய்து கொண்டாய்! ஐயோ! என் மானம் போகிறதே! பிணத்தை எடுக்கவும் வராமல் கட்டுப்போட்டு விட்ட இந்த அவமானத்தை நான் எப்படி சகிப்பேன்? நான் எங்கேனும் கிணத்தில், குளத்தில்தான் விழுந்து இறக்கவேண்டும். இனி உயிர்வாழ எனக்குப் பவிஷு இல்லை." என்று அமர்க்களம் செய்கிருள்.

ராஜன் வெகு பணிவுடன் பாட்டியின் காலைப் பிடித்துக்கொண்டு "பாட்டி! எல்லாம் தெரிந்த உங்களுக்குமா இந்த மாதிரி தோன்றுகிறது. இந்த பெண்ணிற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. அவளை நான் இதற்கு முன் பார்த்ததும் கிடையாது. பேரா

பத்தில் சிக்கிய தருணத்தில் எந்த ஆத்மாவையும் காப்பாற்றவேண்டு வது ஒரு மனிதனின் கடமையல்லவா! ஆபத்தைக் கண்டும் வாளா விருப்பவன் மனிதனாக முடியுமா! மிருகமல்லவா அவன். இவளைக் காப்பாற்றியதற்கா ஓர் பெருங் கட்டுப்பாடு போடுவது? ஜனங்க ளுக்கு இருக்கும் அறிவு இவ்வளவுதானா! பெரியவர்களாகிய நீங்கள் எடுத்துக் கூறவேண்டாமா! மனிதனுக்கும் மிருகத்திற்கும் இருக்கும் வித்யாசந்தான் என்ன? கடவுள்மீது சத்தியமாக நான் ஒரு குற்ற மும் செய்யாத நிரபராதி என்பதை கடவுள் முன்பு ஆணை யிடுவேன். பாட்டி! நீங்களுமா என்னை நம்பவில்லை?" என்று மன்றாடினான்.

கிழவியின் கோபம் சாந்தியடைவதாகத் தோன்றவில்லை "ராஜா! இந்த வேதாந்தமெல்லாம் இங்கு வேண்டாம். பனைமரத்தடி யில் உட்கார்ந்து பால் குடித்தாலும் கள் குடித்த மாதிரி என்பதை நீ மறந்தாயா! இந்த காரியத்தை நீ செய்தது குற்றமற்றது என்று நீ கூறலாம். உலகம் ஒப்புக்கொள்ளாது. இந்த பெண் யார். கருப்ப வதிக்கு துணை யின்றி பிரஸவித்த சமயம் காட்டில் விட்டுவிட்டார் களா? இதென்ன கால் கை இல்லாத கதையா! அல்லது நாவலா! பேஷ்! இந்த வார்த்தை வேண்டாம். அவளை முதலில் துரத்த வேண்டும். நீ கட்டாயம் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். பிறகுதான் பிணத்தை எடுப்பார்களாம். இது உலகச் சொல். நீதிக்கு முண்டோ ஆதரவின்மை என்றால் இக்கலியில் நீதி என்பதே கிடை யாது. உம். என்ன யோசனை?" என்று அதட்டினாள்.

ராஜனின் மனத்தில் இச் சொல் வாள் கொண் டறுப்பதுபோ லும், பதினாயிரம் ஈட்டிகள் குத்துவதுபோலும், நெருப்பு மத்தியில் குதித்துவிட்டதுபோலும் ஆய்விட்டது. "என்ன! என்ன! ப்ராயச் சித்தமா! பிராயச்சித்தமா! நான் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமா! இதென்ன அனியாயம்! நான் என்ன குற்றம் செய் தேன்! கொலை செய்தேனா! செய்யத்தகாத செய்கை செய்தேனா! குடி யைக் கெடுத்தேனா! அந்தோ! அக்ரம உலகமே! அனியாய மக்களின் போக்கே! இதற்கோர் நீதி இல்லையா! ஆபத்தில் காத்தவருக்கு அடுக் குமா பிராயச்சித்தம்! இதென்ன பொம்மை விளையாட்டா! வேடிக் கையா! சீச்சி! நான் ஒருபோதும் இதற்கு இசையமாட்டேன், ஒரு

நாளும் சம்மதிக்கமாட்டேன். என்னைத் தள்ளிவிட்டாலும் சரி. என்ன நடக்கிறதோ பார்ப்போம்.'' என்ற உறுதியும் வீரமும் மனத்தில் பலமாக உண்டாகிவிட்டன.

அவனால் அதற்குமேல் தாங்க முடியவில்லை. "பாட்டி! தாங்களா இவ்வாறு பேசுகிறீர்கள்? எனக்கா ப்ராயச்சித்தம்! நானா ப்ராயச் சித்தம் செய்துகொள்ளவேண்டும்? இதென்ன அக்ரமம்! உலகத்தில் நீதி இல்லையா! தருமமில்லையா! மக்களிடத்தில் நியாயம் இறந்து விட்டதா! இதற்கா நமக்கு ஈசன் அறிவும் ஆற்றலும் கொடுத்தான். மனிதன் என்கிற பெரிய பட்டத்தை யளித்தான். சேச்சே! இதுவா தர்ம உலகம்.! இதுவா அன்பு உலகம். தாதா! என்மீது தாங்கள் என்ன எண்ணினாலும் சரி. என்னுடைய மனச் சாட்சி எனக்குப் போதும். கடவுள் ஒரு கோயிலிலும், ஒரு குறிப்பிட்ட இடத்திலும் மாத்திரமில்லை. எல்லோருடைய இதயத்திலும் இருக்கிறார். என்னிதயத்திலும் அவன் இருந்து என்னுடைய நீதி அநீதிகளை கவனித்துக் கொண்டே இருக்கிறான். ஆதலால் நான் எந்த ப்ராயச்சித்தமும் செய்ய மாட்டேன். என்னையே தள்ளி விட்டாலும் தள்ளி விடுங்கள். இது சத்தியம். ஆபத்தில் உதவுவதற்கு அபராதமும் தண்டனையும் விதிப்பதா நமது மேலான இந்து மத தர்மத்தின் தத்துவம்?

திமிர் பிடித்த மக்களின் சூழ்ச்சிக்குச் செவி கொடுப்பது அறிவாளியின் அழகல்ல. படிப்பது பாகவதம். இடிப்பது ஆலயமா! இதுவா தர்ம நீதி!'' என்று ஆத்திரத்துடனும், வீரத்துடனும் கூறினான். அதே சமயம் மாமன், மாமி அக்கம் பக்கத்திலுள்ளோர் எல்லோரும் சேர்ந்து ராஜனைத் திட்டியது கொஞ்ச நஞ்சமன்று. படித்த திமிர் என்றும், சகவாஸ தோஷ மென்றும் கண்டபடி பேசினார்கள்.

உத்தம வீரனாகிய ராஜன் இந்த மூட ஜனங்களுக்குப் பதில் கூறுவதும், கல் சுவற்றில் முட்டிக் கொள்வதும் ஒன்றாகும் என்றறிந்த அறிவாளியானதால் இவர்களின் முன்பு நிற்காது போய் விட்டான். நேரே :காமுவை விட்டிருந்த பின்கட்டு நடைக்குச்

சென்றான். சென்ற நிமிடமே திடுக்கிட்டான். "காமு! காமு!" என்றழைத்தான். அவள் படுத்திருந்த இடம் காலியாக இருந்தது. குழந்தையும் தாயும் காணவில்லை. சாணி கரைத்துக் கொட்டி இருந்ததைக் கண்டதுதான் அவனுக்கு துக்கமும் ஆத்திரமும் கட்டு மீறி உண்டாயின. "ஹா! ஈசா! இதுதானா உன்னுடைய கருணையின் ஜோதி!" என்றலறி, நெருப்பிடை பட்ட புழுவனத் துடித்து நின்று விட்டான்.

---

## 11-வது அதிகாரம்

### முன்னர் இன்பம்—பின்னர் துன்பம்.

"உலகத்தைப் படைத்தவன் ஒருவனிருக்கிறான். அவன் சகல காரியத்தையும் அதனதன் பலா பலனுக்கேற்ப நடத்திக் கொண்டு போகிறான்; போவான். பாப புண்ணியத்தை சாதாரண ஜனங்களிடத்தில் மறைத்து விடலாம். அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாக உள்ள ஆநந்த மூர்த்தியின் முன்பு எதையும் மறைக்க முடியாது. அசைக்குள் அசைவாயும், மலைக்குள் மலையாயும் இருந்து சகலத்தையும் கவனிப்பவன் அவன் என்கிற எண்ணம் உண்டாகும் எந்த மனிதரும் அக்ருத்யம் செய்யத் துணிய மாட்டார்கள். அதை நினைக்காத கிராதகர்கள்தான் எந்த அனியாயத்தையும் ஆசையுடன் வரவேற்றுச் செய்வார்கள். பயமென்பதே அப்போது தோன்றாதுபோலும்.

மேற்குறித்த கோஷ்டியில் முதல் தரமான பரீக்ஷையில் தேறிய வண்டிக்கார வரதனுக்கும் கன்னிக்கும் அதுவே தொழிலாய், அதுவே கைலாசமாய், அதுவே தமது நித்யகர்மானுஷ்டானத்தின் ப்ரதம கைங்கர்யமாக இருக்கையில் பாவத்தையும் தண்டனையையும் அவர்கள் மனத்தில் கனவில் கூட எண்ண முடியுமா! தமதே ஆட்சி

தாமே கர்த்தர்கள் என்று எண்ணி எண்ணிக்கையற்ற அக்ருத்யங்களைச் செய்து மகிழ்வதே போல இந்த சிசு ஹத்தியிலும் பெரிய சந்தோஷத்துடன் அவர்கள் முன் வந்தார்கள்.

ஆனல் அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத விதமாக அன்று ஏற்பட்ட ஆபத்தானது அவர்களை அடியோடு கலக்கிவிட்டது. எரி மலையே தலையில் புரண்டு விழுந்து விட்டது போலாய் விட்டார்கள். குடிசைக்குள் இந்த மன அதிர்ச்சி தாங்காமலும் இக்கோர சம்பவத்தைக் கண்டு மனம் சகிக்காமலும் மூர்ச்சையாகிவிட்ட விசாலத்திற்கு வெகு நேரம் ஸ்மார்க்கமே தெரியவில்லை. அங்கு அவளைக் கவனிப்பாரும் இல்லாமையினல் பிணம் போலக் கிடந்தாள். வெகு நேரங் கழித்து நடு நிசி சமயத்தில் சற்று கண்ணைத் திறந்தாள். சிறிது நினைவு உண்டாகியது.

அப்போது தான் முன்பு கண்ட விஷயங்களே—சம்பவங்களே—கண் முன்பு தோன்றுகின்றன. எங்கும் ஒரே இருள் சூழ்ந்து கிடக்கின்றது. பயங்கரமோ சொல்லத் திறமில்லை. "இதென்ன! எல்லோரும் எங்கே! குழந்தையின் வேலை முடிந்து விட்டதா! ஹா! ......குழந்தை......குழந்தை.........என்ன அனியாயம்.........ஒரு குழந்தைக்கு உலகம் ஊசி முனையில் தவம் செய்கிறதே. இத்தகைய குழந்தையைக் கொலை......ஆம். ஆம்....கையும் மெய்யும் துணிந்து ......கொலை செய்யும்படிக் கூறினேனே......

சீச்சீ......அவமானம்......காமு......வரதா......என்ன இது ஒருவரையுங் காணவில்லை. இருளோ சூழ்ந்திருக்கிறது. எங்கு சென்றிருக்கக்கூடும். குழியில் போடப் போயிருக்கலாமோ...... ஆகா!...எங்கள் மானத்தையும் பிராணனையும் வாங்கப் பிறந்துள்ள குழந்தை இத்தனை அருமையாகவா, சொர்ண பிம்பம் போலவா பிறக்க வேண்டும்......ஐயோ......அனியாய உலகமே! ஆண் மகன் எத்தனை அக்ரமங்களைச் செய்தாலும் அதற்குத் தண்டனை இல்லை. அந்த ஆண்களின் கபட நாடகத்திற்குப் பலியான பெண்களுக்குத் தானு தண்டனை! அதன் மூலம் உதித்த எத்தனை சிசுக்கள் இவ்விதம் கொலை செய்யப் பட்டனவோ......

ஹா...ஈசா...... என்று கண்ணீர் பெருகியவாறு மெல்ல தட்டித் தடவிய வண்ணம் எழுந்தாள். எங்கும் திக்கு திசையே தெரியவில்லை. மெல்ல தட்டித் தடுமாறி எட்டிடத்தில் இடறி விழுந்த படியே வெளிப் புறத்துக் கதவண்டை வந்தாள். எங்கும் நிச்சப்த மாக இருக்கிறது. விசாலம் "வரதா! வரதா! காமூ! காமூ! எங்கே ஒருவரையும் காணவில்லையே! இப்படி வாருங்கள்......என்ன இது ஏதேனும் மோசமாக இருக்குமா?" என்று சற்று அஞ்சித் தியங்கினாள்.

இருள் எங்கும் கப்பிக்கொண்டிருப்பதால் ஒன்றுமே புரிய வில்லை; மீண்டும் பலமாகக் கூப்பிட்டாள். அதே சமயம் "அடீ பாவி முண்டை! மூதேவீ! உன்னால்தான் எங்கள் கதி இப்படியாய் விட்டது. நீ நாசமாய்ப்போக. ஒருவராலும் கண்டுபிடிக்க முடி யாத எங்களைப் பிடித்துத் தரவேண்டுமென்றுதான் நீ இம்மாதிரி ஆட் களைத் தயார் செய்துவிட்டு நடித்தாய்போலிருக்கிறது. இரு. இரு. உன்னை விட்டேனா பாரு. நாசகாலி" என்று வரதன் கத்துவது காதில் விழுந்தது. விசாலம் திடுக்கிட்டலறினாள்.

"வரதா! என்னடாப்பா திட்டுகிறாய்?! என்ன சமாசாரம்? எனக்கொன்றுமே விளங்கவில்லையே." என்று கூறிக்கொண்டே வீதியில் வந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். வண்டிக்கார வரத னும் கன்னியும் சேர்ந்து கத்தும் சப்தம் வந்த திக்கை நோக்கி மரத் திலும் செடியிலும் இடித்துக்கொண்டு மெல்ல அங்கு வந்தாள். குழந்தைக்காக வெட்டிய குழியில் தபார் என்று விழுந்தாள். பக் கத்திலிருந்த கல்லில் நல்ல அடி பட்டதால் ஹா வென்று கூச்ச லிட்டாள்.

அதே சமயம் சற்று தூரத்தில் சிலர் பேசும் குரல்;கேட்டது. விளக்கு வெளிச்சமும் தெரிந்தது. இதைக் கண்டதும் வண்டிக்கார வரதனுக்குப் பெருந்திகில் பிடித்துக்கொண்டது. மரத்துடன் பிணைத் துக் கட்டி இருப்பதால் அவனால் அசைய முடியவில்லை. 'கன்னியம் மாள் களைத்தே போய்விட்டாள். தூரத்தில் வருபவர்கள் "இப்பக்கந் தான் வரதனின் வண்டி வந்ததுங்க. நான் பார்த்தேனுங்க. ஒரு

பொம்பளெ குந்திக்கிணு இருந்தா! ஒத்தி படுத்துகிணு இருந்தா! அவ நடுப்புற வாந்திகூட எடுத்தாங்க. அப்ப நாங்க புல்லறுத்துகிணு சொமெ தூக்கிகிணு போறேங்க. நாங்க நேரே பூட்டோங்க." என்று அம்மாசி என்பவன் கூறினன்.

இவ் வார்த்தைகள் அப்படியே வரதன் காதில் விழுந்ததும் அவன் நெருப்புமீது விழுந்த புழுவெனத் துடித்தான். அதோடு பாதி உயிர் நீங்கியதாகவே எண்ணினன். அதே சமயத்தில் தான் விசாலம் மேலே விழுந்து கத்தினள். இந்த குரலைக் கேட்டதும் "அதோ! ஏதோ குரல் கேக்குதுங்க. அப்பிடி வளக்கு காட்டுங்க" என்றான் மாரிமுத்து. உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் கையிலிருந்த ஸர்ச் லைட்டு போன்ற விளக்கை அப் பக்கம் காட்டிக்கொண்டே வந்தார்.

அங்கு விசாலம் விழுந்து கிடப்பதும், மரத்தோடு இருவரைக் கட்டி இருப்பதும் நன்றாகத் தெரிந்தது. உடனே எல்லோரும் ஒரு தாவு தாவி குதித்துக்கொண்டே அங்கு ஓடினார்கள். "ஆ! இவதான் இவதான் அந்த வீட்டில் குடி இருந்தவள். ஆண்டவன் ஒருத்தரு இல்லையா! அவரு சும்மா இருப்பாரா! ஏ பெரியம்மா! எயுந்திரு. ஓடிவந்துட்டா மட்டும் ஒஞ்சேதி தெரியாது பூடிம்ணு பாத்தியா! ஒங்க ரகஸியத்தை மறைக்கவேண்டி அந்தம்மாளெ கொண்ணுப் புட்டயெ இதுதானே நாயம். வரதா! பலே அம்பிட்டுகிட்டயா!" என்று அம்மாசி சொன்னன்.

அப்பொழுது இரவு பின் மாலை 3 மணிக்குமேல் இருக்கும். அங்கு வந்த போலீஸார் விசாலத்தைத் தூக்கி நிற்க வைத்துப் பிடித்துக்கொண்டார்கள். விழுந்த வேகத்தில் அம்மாளின் தலை சுழன்று ஆடுகின்றது. மற்றும் இருவர் கன்னியம்மாளையும் வரதனையும் கட்டவிழ்த்து உடனே விலங்கிட்டுப் பிடித்துகொண்டார்கள். இதற்குள் போலீஸ் இன்ஸ்பெக்டர், இந்த இரண்டு ஆட்களைப்பற்றித்தான் நமக்குத் தந்தி தகவல் கிடைத்தது. மொட்டையாக இருப்பதால் யார் என்று தெரியவில்லை. எனினும் இவ்விருவர்களையும் சாமர்த்திய மாகப் பிடித்துக் கட்டி வைத்துவிட்டு நமக்குத் தந்தி யடித்திருப்பது மிகவும் போற்றத்தக்கது." என்று கூறி வியந்தார்.

விசாலம் சற்று தெளிந்ததும், தான் போலீஸாரின் கையில் அகப்பட்டுக்கொண்டிருப்பதை யறிந்து தீயை மிதித்தவள்போல திடுக்கிட்டாள். "என்ன அக்ரமம் இது! என்னை என் பிடித்து வைத்தீர்கள்.?" என்று அலறியவாறு கேட்டாள்.

இதைக் கேட்ட அம்மாசி "யம்மாடீ! இதோ பாரு எம் மூஞ்சி பாரு, நீயா தப்பு செய்யலே: நீயா ரொம்ப சாது. ஐயோ! தாயே! ஓம் பொண்ணு ரகஸியத்தெ அந்தம்மா வெளி உட்ரப்போரா ளேன்னு அவளெ கொலே பண்ணிபுட்டு வந்தூட்டயே! இது யாருக் குந் தெரியாதோ! ஹ்ஹஹ்ஹ." என்று நகைத்தான். இதன் தகவல் தெரியாது விசாலம் திகைத்தாள். ஒன்றுமே புரியாது குழம்பி யோசித்தாள்.

இதற்குள் இவள் குடி இருந்த வீட்டுக்காரன் "என்ன திருகத் திருக விழிக்கிருய்? ஐயா! இன்ஸ்பெக்ட்டர்வாள்! இவர்களின் நடக்கையைப் பற்றிச் சந்தேகம் எனக்கு வெகு நாட்களாக உண்டு. இப்போது அது ஊர்ஜிதமாகிவிட்டது. இவள் மகள் கல்யாண மில்வாத கன்னிகை பூர்ண கர்ப்பிணியாகிவிட்டதை யறிந்து நாங்கள் அவமானப்பட்டு இவர்களைக் காலி செய்துவிடக் கூறிவிட்டோம்.

அச்சமயம் இவர்களுக்கு உறவான ஒரு கிழவி இவர்களுடைய யோக்யதையை அறிந்துகொண்டுதான் ஊரிலிருந்து கண்டிக்க வந்தாளாம். இவர்களுக்குள் தர்க்கமும் வாக்குவாதமும் நடந்து கொண்டிருந்தது. இது அக்கம் பக்கங் கூடத் தெரியும். இதில் பிறர் தலையிடுவானேன் என்று நாங்கள் பேசாதிருந்தோம். இவர்கள் வரதன் வண்டியைப் பேசிக்கொண்டு ஒருவரிடமும் சொல்லாது மூடி முக்காடிட்டுக்கொண்டு போய்விட்டார்கள்.

இந்த வேடிக்கையை ஊாரெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு நான் வெளியிலிருந்து வந்ததும் இவர்கள் சென்று விட்டதைக் கூறினார்கள். நான் ஒரு சனி தொலைந்தது என்று சந்தோஷ மடைந்தேன். சற்று நேரஞ் சென்று உள்ளே போய் காலி செய்த இடத்தைப் பார்த்தபோது அங்கு வந்த அம்மாள் பயங்கர

மாக ரத்தத்தில் மிதந்துகொண்டு விழுந்து கிடப்பதைக் கண்டு அலறி நடுங்கினேன். உடனே வீட்டில் விசாரித்ததில் 'பலத்த சத்தங் கேட்டது. வாக்குவாதம் நடந்தது என்றது மட்டுந்தான் தெரியும்'' என்றார்கள்.

எனக்குக் குடல் நடுங்கிவிட்டது. நான் அடுத்த க்ஷணமே உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். பிறகு நீங்கள் வந்து டாக்டருடன் சோதித்ததில் உயிர் போய்விட்டதென்றும், இது வேண்டுமென்று தள்ளி மண்டையை உடைத்துக் கொலை செய்ததாகவும் ருஜுவாகிவிட்டது. அந்த அம்மாள் இவர்களின் பந்துவாம். "இவள் இந்த அவமானத்தைக் கண்டு பிடித்துவிட்டாளே! வெளியில் கூறிவிட்டால் ஆபத்தாகி விடுமே! இவளையும் ஒழித்துவிட்டு பிறக்கப் போகும் குழந்தையையும் ஒழித்துவிட்டால் தன் ஊழல் குப்பை இம்மட்டுடன் நின்று, நாற்றம் மறைந்து, குணமும் மணமும் கண்டு விடலாம்'' என்று எண்ணிவிட்டாள் பாவம்! உம். பெண் எங்கே பாருங்கள்...ஏ கிழவி! காமு எங்கே? சொல்லு'' என்று அதட்டினான்.

இதுவரையில் தான் ஒரே கொலை—சிசுக் கொலை—செய்ததாக எண்ணி இருந்த விசாலத்திற்கு இதற்கு முன்பே ஒரு பெரிய கொலையின் பழியும் தன்னைச் சார்ந்திருக்கிறது என்பதைக் கேட்டதும் அவள் நிலைமை எப்படி இருக்கும் என்று கூறவேண்டுமா! தான் அக் கிழவியை ஆத்திரத்துடன் பிடித்துத் தள்ளியது தனக்கு மறந்து விடுமா..."ஆஹா! அவளை ஆவேசத்துடனும், அடங்கா கோபத்துடனும் தள்ளியது இப்படியா மண்டை யுடைந்து பெரும் பழி வந்துவிட்டது. ஐயோ! என்ன செய்வேன்?'' என்று நினைத்த மாத்திரத்தில் தன் நினைவே அற்று விழுந்துவிட்டாள். வாயும் அடைத்துவிட்டது. இந்த அதிர்ச்சி மின்சார சக்திபோலத் தாக்கிவிட்டது.

போலீஸார் வரதனை நோக்கி "என்ன ஐயா! வண்டிக்கார வரதரே! தொழில் செய்ததால் முன்னர் அடைந்த இன்பங்களெல்லாம் இப்போது தான் பலனைக் கொடுத்தன பாவம்,..உம். உமது

பழய லீலைகள் கிடக்கட்டும். இப்போது நடந்த செய்தியைக் கூறு.'' என்று அதட்டினார் இன்ஸ்பெக்டர்.

பழய நாளைய பெருச்சாளியான வரதன் தனக்கும் இப்படி யொரு காலம் வரும் என்று கனவிலும் கருதாது திமிர் பிடித்திருந் தானாதலால் இந்த விதம் அகப்பட்டுக்கொண்டதும் முகமே ப்ரேதம் போலாகிவிட்டது. வாய் திறவாது சற்று நேரம் ஊமை போல நின்றான். மீண்டும் இன்ஸ்பெக்டர் வரதனை நோக்கி "ஏனையா! ஸ்பெஷல் மரியாதை வேண்டுமா, நடந்ததைக் கூறுகிறீரா......எடுக் கட்டுமா? என்றார்.

உடனே வரதன் நடந்த சகல வரலாற்றையுங் கூறி "அந்த ஆசாமிகள் யாரோ! எங்கு சென்றார்களோ; எப்படி வந்தார்களோ என்றது ஒன்றுமே எனக்குத் தெரியாது. எங்களைக் கட்டிப்போட்டு விட்டு என் வண்டியையே ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டார்கள். படுபாவி மகன்.'' என்று திட்டவும் தொடங்கினான்.

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் "ஓகோ! பாவி மகனா! அப் படித்தானையா இருக்கும் உமக்கு! உடந்தையாக விருந்தால் புண் ணியவானாக விருப்பான். உம், இந்த குழந்தையைப் போல எத்தனை குழந்தைகள் உங்கள் கையினால் மோக்ஷத்திற்குப் போயிருக்கின் றனவோ? இதொரு பெரிய காரியமா உமக்கு? சரிதான்: அந்த மனி தன் எப்படி இருந்தான். அவனுடைய அடையாளங்களை ஏதாவது சொல்ல முடியுமா?'' என்றார்.

வரத:—ஆமாம். அவன்தான் பின்புறம் எமன் போலே வந்து மண்டையிலே போட்டுத் தள்ளினானே, அவன் மூஞ்சியே யார் கவ னிச்சா? அவன் நல்ல வயசுக்காரன்னு மட்டும் சொல்லுவேன். இந்த பாவி முண்டையாலே என் விதி இப்படி யாச்சு. அத்துக் கழுதை முண்டெ—என்று கூறிக்கொண்டே ஆத்திரத்துடன் கையை உதறிக்கொண்டு மடியில் கையை போடப் போனான்.

இதை சூக்ஷ்மமாகக் கவனித்த இன்ஸ்பெக்டரும் சேவகர் களும் வரதனைத் திமிர விடாது கெட்டியாகப் பிடித்துக்கொண்டு

அவன் மடியைச் சோதனை செய்தார்கள். அதில் தோட்டாக்க ளுடன் கூடிய ஒரு கைத் துப்பாக்கியும், பீச்சாங்கத்தியும் இருக்கக் கண்டு அவற்றைப் பிடுங்கிக்கொண்டு, அவனுக்கு விலங்கு பூட்டி விட்டுக் கன்னியம்மாளிடம் வந்து "ஏ கிழவி! இங்கு என்ன நடந் தது சொல்லு." என்று கேட்டார்கள். அவளும் வரதனும் வெகு தொலைவில் வைக்கப்பட்ட பின்னரும், வரதன் ஒப்பித்த பாடத்தையே அவளும் ஒப்பித்ததால் நடந்தது உண்மை என்று தீர்மானித்தார்கள்.

"ஏ கிழவி! அந்த பெண்ணும் குழந்தையும் எங்கே! அக் குழந்தை இறந்து விட்டதா, பிழைத்திருக்கிறதா?" என்று கேட் டார்.

கிழவி :—ஆமாம்! அந்த சனியன் இருந்தால் தேவலையா! தொலைந்தால் தேவலையா பீடை அதன் தலையில் கட்டபாறை எழுத்தா இருந்தா உசிரோடே இருக்கும். இல்லாப் பூட்டா இன் னேரத்துக்கே செத்திருக்காதா! அந்த முண்டெயெ வந்த கம்ம னுட்டிப் பய இசித்திகினு பூட்டான்.

இன்ஸ்பெக்டர் விசாலத்தின் அருகில் வந்து அவளை நோக்கி "அம்மா! உன் மகளெங்கே! நடந்ததை ஒளியாது சொல்லு." என்றார். விசாலம் என்ன சொல்வாள் பாவம்! "ஐயா! எனது பிறவியே பொல்லாத பிறவி. இருப்பினும் இப்போது போறாத கொடிய காலம். அதனால் தான் நம்பிய பாவியால் த்ரோக மிழைக்கப் பட்டு நாசமாகி விட்டோம். என் மகள் எங்கேயோ! குழந்தை என்ன வாகியதோ? என் வயிற்றெரிச்சலும் அவமானமும் தாங்காது நான் குழந்தையைக் கொல்லச் சொல்லியது என்னவோ உண்மைதான். நீங்கள் இன்னும் ஏதோ சொல்கிறீர்களே அது எனக்கு எதுவுமே தெரியாது. என்னை வீண் சண்டைக்கு இழுப்ப தற்கே அந்தப் பாவி வந்தாள். எப்படி செத்தாளோ! என்னவோ! நான் அறியவே மாட்டேன். இது சத்தியம். இதற்கு மேல் என்னால் எதுவுமே சொல்ல முடியாது." என்று கூறினாள்.

வீண் கால தாமதம் செய்துகொண்டிருப்பதில் உபயோக மென்ன? இம் மூவருக்கும் விலங்கிட்டு நடத்திச் செல்லலானார்கள்.

விசாலத்தின் மனம் எப்படித்தானிருக்கும். ஆதி முதல் அந்த ஒரு மகளுக்காகப் பட்ட கஷ்டங்களைக் கணக்கிடக்கூடுமா! அத்தனையும் அனுபவித்த பிறகாவது இப்பெண்ணால் தனக்கொரு காலத்தில் சுகங்கிடைக்குமென்று எண்ணியதற்கு மாறாகக் கனவிலுங் கருதக் கூடாத பெரும் விபத்து வந்து நேரிட்டதே! இத்தகைய மகா பாபிக்கு ஆயிசுமா பெருகவேண்டும். ஹா! ஈசா! நான் மனமும் கையுந் துணிந்து ஒரு சிசுவைக் கொல்லும்படியாகக் கூறியதற்குப் பலன் இதுவும் போதாது. இன்னமும் வேண்டும். ஆகா! ஒரு ஆண் மகன் கன்னெஞ்சக் கட்டேலெ போவான் செய்துவிட்ட வேலைக்கு இவ்விதம் ஒரு குடும்பமே அதோகதி யாகும்படி யாகிவிட்டதே. கடவுளே! நீ எங்கே தூங்குகிறாயா! எங்கேனும் ஓடிப்போய்விட்டாயா! உலகத்திலுள்ள நியாய அனியாயத்தைக் கண்டிக்கும் கர்த்தன் நீயே இப்படி இருந்தால் மனிதர்களால் என்ன முடியும்...... சீச்சீ......இதென்ன மடமை......நான் முன்னர் வெகு இன்பமாகச் செய்த பாவத்தை இப்போது அனுபவித்துத்தானே தீரவேண்டும். துன்பமென்றால் விடுமா, விலகுமா! என்று விசாலம் தனக்குள் நினைத்துப் புலம்பியபடியே செல்கிறாள்.

பொழுது பலபலவென்று உதயமாகிவிட்டது. இம் மூவரையும் விலங்குடன் அழைத்துச் செல்வதை வீதியில் போவோர் வருவோரெல்லாம் வேடிக்கை பார்த்துச் சிரித்துக்கொண்டு செல்வோரும் 'இவனா! வண்டிக்கார வரதனல்லவா இவன்! ஆத்து. எத்தனை நாளைக் குத்தான் இப்படி தப்பிக்க முடியும்? பேஷ் வேணும்டா என்போரும், விசாலத்தைப் பார்த்து "இவ அந்த ஓட்டலில் வேலை செய்தவ இல்லையா! ஐய்யய்யோ என்ன காரணமாக இவளும் கைதியானாள்?" என்போருமாக பேசிக்கொண்டே செல்கிறார்கள்.

இம் மொழிகளைக் கேட்ட விசாலத்தின் உள்ளம் கொதிக்கின்றது. அவமானம் ப்ராணனே போய்விடும் போலவிருக்கிறது குனிந்த தலையை நிமிராது நடக்கிறாள். இடை யிடையே "ஐயோ! எங்கே இழுத்துக் கொண்டு போகிறீர்கள்? என் மகளை நான் தேட வேண்டாமா! அவளும் குழந்தையும் இருக்கிறார்களா, இல்லையா என்று நான் பார்க்க வேண்டாமா! என்னை விட்டு விடுங்கள்" என்று

ஆத்திரத்துடன் கூறுகிறாள். இதற்கு செவி கொடுப்போர் யார் இருக்கிறார்கள்?

எல்லோரையும் ஸ்டேஷனில் கொண்டு அடைத்தார்கள். உடனே விசாலம் முன்பு குடி இருந்த வீட்டிற்கு வந்து அங்குள்ளோர்களிடம் வாக்குமூலம் வாங்கிக் கொண்டு அந்த ப்ரேதத்தையும் ஸ்டேஷனுக்குத் தூக்கிக் கொண்டு சென்று விட்டார்கள். வீட்டிலும் அக்கம் பக்கத்திலும் கிடைத்த சாக்ஷிகளும், சந்தர்ப்ப சாக்ஷியமும் ஒன்று கூடி "விசாலத்தின் மகளுடைய திருட்டுக் கர்ப்பத்தை இக் கிழவி கண்டு கண்டிக்க வந்ததனால் தங்களுக்கு அது பெரிய ஆபத்தாக முடியும் என்று கருதி அவளைக் கொலை செய்து விட்டால்தான் தங்கள் ரகசியம் வெளியாகாதிருக்குமென்று தீர்மானித்துத் தாயும் மகளும் ஒன்று கூடிச் சேர்ந்து யோசித்து இவளைக் கொலை செய்து விட்டுத் தாம் தப்பித்துக் கொள்ள வேண்டி ஒடி விட்டார்கள். மத்தியில் ப்ரஸவம் நேரிட்டதால் சிசுஹத்திக்கும் துணிந்தார்கள். இவர்கள் தான் குற்றவாளி. காப்பாற்றிய ஆசாமி இவர்களின் யோக்யதையை அறியாது காப்பாற்றி இருக்கிறான்." என்ற தீர்ப்பு ஏற்பட்டு விட்டது.

ஒரு சிறிய துரும்பு கிடைத்தால் அதைக் கொண்டு பெரிய கயிறு திரிக்கும் போலீஸாருக்கு இம் மட்டும் போதாதா! இனிமேல் என்ன வேண்டும். இறந்து விட்ட கிழவியின் ஊருக்குத் தந்தி யடித்தார்கள். காமுவைத் தேடும் பொருட்டு ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் தகவல் கொடுத்து விட்டார்கள். வண்டிக்கார வரதனையும் கன்னியும் பிடிக்கக் காரணமா யிருந்த ஆசாமியைத் தேடவும் ஏற்பாடு செய்தார்கள். பத்திரிகைகளில் ப்ரசுரமும் செய்தார்கள்.

இறந்த கிழவியின் சொந்தக்காரர்கள் வந்து 'லபோ திபோ' என்று அடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து விசாலத்தையும் காமுவையும் திட்டுகிறார்கள். இக் கொலைச் செய்தி ஊர் முற்றும் பரவி விட்டது. எங்கும் இதே பேச்சாகி விட்டது.

இக் கொலையில் சம்பந்தப்பட்ட காமுவையும் தேடிப் பிடிக்கும் வரையில் கேஸ் நடத்துவதற்கு இல்லை யாதலால் இக் கைதிகள்

மூவரையும் அவ்வூர் சிறைச்சாலேக்கு அனுப்பி விட்டார்கள். விசாலத்தையும் கன்னியையும் பெண்களுக் கென உள்ள சிறையில் கொண்டு விட்டு அவர்களே வழக்கம் போலச் சோதனை போட்டார்கள். உண்மையில் நிரபராதியான விசாலத்தினிடம் ஒன்றும் கிடைக்கவில்லை.

சிறைச்சாலைக்கு வரும் திருட்டு, கொலைக்காரக் கைதிகளே சோதித்து அனுபவப்பட்ட வார்டர்களுக்கு எப்படி சோதிக்க வேண்டுமென்று தெரியாதா! ஒவ்வொரு கைதியையும் கன்னத்திலும் கழுத்துப் பட்டைகளிலும் குறி பார்த்து படார் படார் என்று அடித்து ஆட்டிக் குலுக்கினுல் தபீர் தபீர் என்று பணமும் சில்லறைகளும் விழும் வேடிக்கையைப் பார்த்தால் ஆச்சரியங் கூற முடியாது. பார்ப்பதற்குச் சாதாரணமாக விருக்கும் வாய்க்குள் எப்படி இத்தனையும் இருந்தன என்று வியப்புறுமலிருக்கவே முடியாது.

தலை மயிரோடு மயிராகச் சிலர் சிறிய கருப்புத் துணியில் பணத்தை முடிந்து வைத்து தலைமயிரை வேண்டுமென்றே ஆலம் பால் தடவி சிக்குபடச் செய்து ஒரே கூண்டாகக் கட்டுவார்கள். இதை பிறகு அறிந்த வார்டர்கள் இவர்கள் தலை மயிரை சிக்கு எடுத்துப் பிரித்து பார்த்தால் அதனுள்ளே பொருளைக் காணலாம். இன்னும் வாய் விட்டுச் சொல்லக் கூடாத விதமான முறைகளில் எல்லாம் பணத்தை அடக்கிக் கொண்டு வருவார்கள். இதற்கென்றே இரண்டு ஸ்பெஷல் வார்டர்களையும், நரஸுகளையும் அங்கு வைத்திருக்கிறார்கள்.

இம் மாதிரி இன்னும் எத்தனையோ விதமான விசித்திர வேலைகளைச் செய்வதில் தேர்ச்சி பெற்ற கைதிகளோடு தினம் போராடும் வார்டர்களின் சாத்தியமும் திறமையும் கூற வேண்டுமா? வார்டர்களின் கடமை என்று இம்மாதிரி பரிசோதனையும், தண்டனைகளையும் ஆர்பாட்டங்களையும் செய்வது. உள்ளுக் குள்ளிருக்கும் கைதிகளுக்கு இவ் வார்டர்களில் சிலரே உடந்தையாக விருந்து திருட்டுத்தனமாக உதவி புரிவது. இம்மாதிரியான கள்ளத்தனங்கள் பல காரியங்களிலும் இருப்பதால்தான் எத்தனையோ

விஷயங்கள் கெட்டுப் போவதுடன் அவ் விஷயங்களுக்குப் பண்டைக் காலத்தி லிருந்த பெருமைகளும் மாறிக் குன்றி பழிக்கும்படியாகி விடுகின்றன.

இத்தகைய வார்டர்கள் கன்னியம்மாளை சோதனை செய்யாமல் விடுவார்களா! அவளை முறைப்படி சோதனை செய்ததில் அவளுடைய புடவையில் ஒரு பாகத்தைப் பை போலத் தைத்திருந்தது. அதை இழுத்துப் பார்த்ததில் அதனுள் கூரிய ஈட்டி போன்ற சிறிய கத்தி யொன்றும், மற்றொரு பாகத்தில் சில மயக்க மருந்துகளும், விஷ மருந்துகளும், மூலிகையின் வேர்களும் இருந்தன. அவைகளை எடுத்து வைத்து விட்டுக் கன்னத்தில் பளீர் என்று இரண்டடி விட்டு கழுத்தில் ஒருவிதமாக நசுக்கினார்கள்.

கப கப வென்று இரு புறத்திலிருந்தும் நான்கைந்து சவரன்கள் விழுந்தன. இவைகளை எல்லாம் பார்த்து ஆச்சரிய மடைந்த விசாலம் "ஐயோ! இப்படியும் இருக்குமா!" என்று வியப்புற்றுத் தன் விசனத்தையும் மறந்து நின்றாள். முற்றிலும் சோதனை செய்த பிறகு இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றார்கள். அப்போது பிற் பகல் நேரமாதலால் உள்ளே இருக்கும் மற்ற கைதிகள் வெளியில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இவ் விருவர்களையும் பார்த்து சிலர் ஓடி வந்து "யம்மா! யம்மா! வார்டரம்மா! இவங்க கொலை பண்ணவங்களா! திருடினவங்களா?" என்று வெகு கருத்துடனும், ஒரு வித சந்தோஷத்துடனும் கேட்டார்கள்.

இதைக் கேட்ட வார்டர் "எல்லாம் உன்னைப் போல ஒருத்தி; அதோ அவளைப் போல ஒருத்தி தான். போங்க. வேலைகளை கவனியுங்க." என்று அதட்டினாள். மானங் கெட்டவர்கள் மண்ட லத்திற்குப் பெரியவர்கள் என்ற பழமொழிப் படிக்கு இவர்களுக்கு மானமா, வெட்கமா, பயமா! ஒன்றுமில்லை. ஒருத்தி தைரியமாக விசாலத்தை நோக்கி "ஏண்டியம்மா! யாரை கொண்ணுப்புட்டே." என்று குசல ப்ரச்னம் விசாரிக்கத் தொடங்கி விட்டாள்.

இதற்குள் விசாலத்தையும், கன்னியையும் தனித் தனியாக ஒண்டிக் கொட்டடியில் போட்டுப் பூட்டி விட்டுக் காவல் வைத்து

விட்டார்கள். உள்ளே தள்ளப் பட்ட விசாலம் இங்குள்ள கைதிகளையும், ஜெயில் கொட்டடிகளையும் காவல்களையும் தன்னையொருத்தி கேட்டதையும் பார்த்து ப்ரமித்துப் போய் ஒன்றுமே தோன்றாது கிலி பிடித்து மூர்ச்சையாகி விழுந்து விட்டாள்.

---

182974

இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது.

ஜெயஸ்ரீ

விலை அணா நான்கு

நான்கு ரூபாய் பெறுமான ருசியுள்ள துப்பறியும் நாவல்.

கண்ணைக் கவரும் சித்திரப் படங்களுடன் கூடிய ஹாஸ்யக் கதைகள் அடங்கிய

பக்ஷமாலிகா

அணா ஆறு தான்

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS,

# தி யுனைடெட் இந்தியா

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் : மதராஸ்.) (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

2½ கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள்.
60 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
14 லக்ஷத்திற்கும் மேலாகவே
வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்.
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

**Jaganmohini** (March 1935) Regd. No. **M. 2210**

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது
வருஷங்களுக்கு
மேலாக
முன்னணியில்
நிற்கின்றது.




மற்றவைகள்
இதைப்
பின்பற்றித்தான்
வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.